பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 21 வியாழக்கிழமை 07.12.2023 கதிர் 391

# பொருளாதாரத்தைப் பலப்படுத்தக்கூடிய நபரே அடுத்த ஜனாதிபதி வேட்பாளர்

## நாமல் ராஜபக்ஷ நேற்று அறிவிப்பு

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரையிலுமே ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கியுள்ளோம். தேர்தல் நடந்தால் நாட்டின் பொருளாதாரத்தைப்பலப்படுத்தக்கூடிய ஒருவரை வேட்பாளராக முன்நிறுத்துவோம்.

இவ்வாறு தெரிவித்தார் அம்பாறை மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினரும்முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்சவின் மகனுமான நாமல் ராஜபக்ஷ. இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் நடைபெறுமாயின் அதனை எதிர்கொள்ளக் கட்சி என்ற ரீதியில் நாம் தயாராகவே இருக்கிறோம். ☞2

## இது ரகசியம் அல்ல!

இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்படுவது இந்தியாவின் உதவி இன்றிச் சாத்தியமில்லை என்று கருதுகின்ற புலம்பெயர் தமிழர்களும் இலங்கைத் தமிழ்த் தலைவர்களும்உள்ளனர். இதற்காக நகர்வுகளுக்காக புதுடில்லியுடன் ஈழத் தமிழர்களுக்கு நேரடியான இராஜதந்திரத் தொடர்பாடல்கள் இருக்கவேண்டும்என்றுநினைக்கும் புலம்பெயர்தமிழர்களும்கணிசமாக இருக்கின்றனர்.

குறிப்பாக மேற்கு நாடுகளை மையப்படுத்திச் செயற்பட்டுவரும் புலம்பெயர் அமைப்புக்களில் பலவும் தத்தமது நாடுகளில் இராஜதந்திர வட்டாரங்களில் நேரடியான ஊடாட்டத்தைக் கொண்டிருக்கின்றனர். ☞2

## இந்திய மீனவர்கள் 14 பேர் கைது

இலங்கைகடற்பரப்புக்குள்அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 14 இந்திய மீனவர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் - நெடுந்தீவு கடற்பரப்பிற்குள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோது அவர்கள் கைது செய்யப்பட்டனர்என்றுகடற்படையினர் அறிவித்துள்ளனர். இலங்கை கடற்படையினர் 3 படகுகளையும் அதிலிருந்த 14 மீனவர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை ☞2

## டெங்கை கட்டுப்படுத்துவதற்கு விரைவு நடவடிக்கை தேவை

### சாகல உரிய தரப்புகளுக்கு உத்தரவு

மழைக்காலத்தில் டெங்குநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றமையை கருத்தில் கொண்டு அதனை கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்குமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான மூத்த ஆலோசகரும் ஜனாதிபதிபணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உரிய தரப்புக்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தேசியடெங்குஒழிப்பு பிரிவுடன்இ சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொலஇ ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானிசாகலரத்நாயக்க ஆகியோர்தலைமையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றசந்திப்பின்போதே சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறுஅறிவுறுத்தல் வழங்கினார்.

கொழும்பு, கம்பஹா, கண்டி மற்றும் யாழ்ப்பாணம்உள்ளிட்ட மாவட்டங்களில் டெங்கு நோய்ப் ☞2

## பௌத்தம் தவிர ஏனைய மதங்களுக்கு நிதி கிடையாது

### சிறிதரன் எம்.பி. நாடாளுமன்றில் தெரிவிப்பு

பௌத்த மதத்திற்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றபோதும் இந்து. கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களுக்கென எந்த நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் நடைபெற்ற சுற்றுலாத்துறை மற்றும் காணிஅமைச்சு மற்றும் புத்தசாசனசமயமற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுகளுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகயிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர்அங்குமேலும் தெரிவித்ததாவது:

புத்த பெருமான் போதித்தமனிதாபிமானக் கண்களால் தமிழ் மக்களைப் பாருங்கள். புத்தபெருமான் போதித்த அறிவுக் ☞2

## தொல்பொருள் பணிப்பாளருக்குப் பதில் அமைச்சரையே நீக்கியிருக்கவேண்டும்

### சாணயக்கியன் தெரிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொல்பொருள்திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தை பதவி நீக்கியதற்குப் பதில் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவைத்தான் பதவி நீக்கியிருக்கவெண்டு;ம்என்று நாடாளுமன்றஉறுப்பினர் இராசமாணிக்கம்சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றையதினம் நடைபெற்ற சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு மற்றும் புத்தசாசனஇசமயமற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுகளுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர்அங்குமேலும் உரையாற்றுகையில்இ

இந்த நாட்டில் இனவாதத்தினை முன்னெடுப்பதற்காக பயன்படுத்தப்படும் ஒரு கருவியாகவே தொல்பொருள்திணைக்களம் காணப்படுகின்றது. அதனோடு புத்தசாசன அமைச்சரும் காணப்படுகின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கஇ தொல்பொருள்திணைக்களத்தின்பணிப்பாளரை பதவிநீக்கியதற்குபதிலாக அமைச்சரையே பதவி நீக்கியிருக்கவேண்டும்.

ஏனென்றால் இந்த அமைச்சர் தான் குருந்தூர்மலையில் நீதிமன்ற கட்டளையையும் தாண்டி தேரர்களையும் ☞2

### வட்டுக்கோட்டை அலெக்ஸ் இறப்பு:

## 3 பொலிஸார் உட்பட ஐவரிடம் நேற்று சாட்சியங்கள் பதிவு

வட்டுக்கோட்டை சித்தன்கேணி இளைஞனான நாகராசா அலெக்ஸின் இறப்புத் தொடர்பான வழக்கில் மூன்று பொலிஸ் சாட்சிகள் மற்றும் இரண்டு சிவில் சாட்சிகள் என 5 சாட்சிகள் யாழ்.நீதவான் நீதிமன்றில் நேற்றுப் பதிவு செய்துள்ளன.

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞன் சித்திரவதைகளுக்கு உள்ளன நிலையில் கடந்த 19ஆம் திகதி உயிரிழந்தார்.

அது தொடர்பிலான வழக்கு விசாரணைகள் யாழ்.நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்று வருகின்றது.

நேற்றைய விசாரணையின் போது செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வழக்கு விசாரணைகளின்போது இ நவம்பர் 8ஆம் திகதி முதல் 12ஆம் திகதி ☞2

## இல்லாத பிரச்சினையை ஏற்படுத்த வேண்டாம்

### பௌத்த சாசன அமைச்சர் வேண்டுகோள்

இல்லாத பிரச்சினையை ஏற்படுத்த வேண்டாமென புத்த சாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க சபையில் தமிழ் உறுப்பினர்களிடத்தில் கேட்டுக் கொண்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் நடைபெற்ற சுற்றுலாத்துறை மற்றும்காணி அமைச்சு மற்றும் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள்அமைச்சுகளுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு பதிலளித்து ☞2

## 21 வயதில் பட்டதாரியாகும்படி கல்வி திட்டத்தில் மாற்றம் வரும்

### அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவிப்பு

மாணவர் ஒருவர் 21 வயதில் பட்டதாரியாகும் வகையில்கல்வித்திட்டம் திருத்தியமைக்கப்படும் என்று கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

2024 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் கல்வி அமைச்சுக்காக 237 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாகாண ரீதியில் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள 280 ☞8

## புதிய பொருளாதாரத் திட்டம் ஜனவரியில் தொடங்கப்படுமாம்

அனைத்துத் துறைகளையும் நவீனமயப் படுத்திநாட்டைமுன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லும் புதிய பொருளாதார வேலைத் திட்டம் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

புறக்கோட்டையிலுள்ள சோலிஸ் ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற அரச மதிப்பீட்டு திணைக்களத்தின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

அவர்அங்குமேலும் தெரிவித்ததாவது:

மதிப்பீட்டுத் துறை செயல்முறை போர்த்துகேயரின் காலனித்துவக் காலத்திற்கு முந்தையது. பிரிட்டிஷ்காலத்தில் ☞2

## நாணய நிதிய 2ஆம் கட்ட நிதி ஒரே வாரத்திற்குள் கிடைக்கும்

### அமைச்சர் பந்துல நம்பிக்கை

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணை நிதி இன்னும் ஒருவாரத்திற்குள்கிடைக்கும் எனத் தான் நம்புகிறார் எனவும்இ சீனா, இந்தியா, ஜப்பான்மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைக்கு உத்தியோகபூர்வமாக இணக்கம் தெரிவித்துள் ளதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர்இ வெகுஜன ஊடகது; துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை ☞8

## மூவர் கைது

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழையில் பொலிஸ் நிலையம் அருகே இடம்பெற்ற வாள்வெட்டுவன்முறைச் சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு - வள்ளிபுனம்இ முத்தையன் பகுதிகளைச் சேர்ந்த இருவரும் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவருமே இன்றைய தினம் கைது ☞2

## சர்வதேச நீர் மாநாடு டிசெ. 14, 15இல்

இந்தவருடத்திற்கான சர்வதேச நீர் மாநாடு 2023 டிசம்பர் மாதம் 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் நீர் மற்றும் சுகாதாரத்தில் சிறந்து விளங்கும் மையத்தில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நீர் வழங்கல்மற்றும்வடிகாலமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டுக்கான சர்வதேச நீர் மாநாடு தொடர்பாகஇ அரசாங்க தகவல்திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும்உரையாற்றுகையில்

நீடித்துநிற்கும் அபிவிருத்தி ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இருப்பினும் அவர்களால் தமது அரசுகள் மூலம் இலங்கை மீது முழுமையான செல்வாக்கையோ அழுத்தத்தையோ செலுத்த முடிவதில்லை. காரணம் நந்தி மாதிரி இடையில் நிற்கும் இந்தியா.

தெற்காசியாவைப் பொறுத்தவரையில் அதிலும் ஆசிய பசுபிக் பிராந்தியத்தைப்பொறுத்தவரையில் மேற்குநாடுகளுக்கு இந்தியாவை மையப்படுத்திய அயலுறவுக் கொள்கையே இப்போதைக்கு முதன்மையானது. எனவே ஈழத் தமிழர் நிலைப்பாட்டில் இந்தியாவின் போக்கை ஒட்டியே அந்த நாடுகளின் கொள்கை வகுப்புக்களும் அணிவகுக்கும் நிலையே காணப்படுகின்றது.

தமிழர்களுக்கானஅரசியல்உரிமை வழங்கப்படவேண்டும்இ மனித உரிமைகள்மதிக்கப்படவேண்டும்இ பொர்க் குற்றங்களுக்கு நீதி வழங்கப்படவேண்டும் போன்ற பொதுவான சில கொள்கைகளை இலங்கை விடயத்தில் மேற்கு நாடுகள் வலியுறுத்தி வந்தாலும்இ இவையெல்லாமும்கூடஇந்தியாவின் கொள்கைப்போக்குக்குமுரண்படாத வகையிலேயே மேற்குலக நாடுகளால் முன்னெடுக்கப்படும் என்பதை தத்தமது நாடுகளின் இராஜதந்திர ஊடாட்டங்கள் மூலம் அறிந்திருக்கும் புலம்பெயர் அமைப்புக்கள்இ இந்தியாவுடன் ஈழத் தமிழர்களுக்கான நேரடி ஊடாட்டத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றன.

சில பல முயற்சிகளை ஒவ்வொரு அமைப்பும் தனித் தனியாக மேற்கொள்கின்றன. தமிழ்நாடு மற்றும் டில்லி ஆகிய இரு இடங்களையும்மையப்படுத்தியதாக இந்த நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இதற்காகத் தமது இருப்பிடத்தை இந்தியாவிற்கு மாற்றிக்கொண்டு வந்துவிட்ட சில செயற்பாட்டாளர்களும்கூட இருக்கிறார்கள். இவர்களால் கடந்த 15 வருடங்களில் அப்படி என்ன சாதிக்க முடிந்தது என்று கேட்டால்இ கடந்த70வருடங்களால்உங்களால் என்ன சாதிக்க முடிந்தது என்று திருப்பிக் கேட்பார்கள்.

அப்படிப்பட்ட பின்னணியில்தான் இந்த மாதத் தொடக்கத்தில் புதுடில்லிப் பல்கலைக்கழகத்தின் நவீன இந்திய மொழிகள் மற்றும் இலக்கியத்துறையின் சார்பில் ஈழத் தமிழர்கள் பிரச்சினை தொடர்பில் ஆராயப்படும் ஒரு சர்வதேசக் கருத்தரங்கு இடம்பெற்றது. ஆஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸ் இதற்கான அனுசரணையை வழங்கியிருந்தது. இலங்கையில் இருந்து முன்னாள் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்ஞா.சிறிநேசன், வேலன் சுவாமிகள் உள்ளிட்ட ஒரு குழுவினர் டில்லி சென்றிருந்தனர்.

கருத்தரங்கு எல்லாம் முடிந்து அவர்கள் உடனேயே நாடு திரும்பிவிட்டனர். விக்னேஸ்வரன் மட்டும் திரும்பி வரவில்லை. அவர் டில்லியிலிருந்து நேரடியாக தமிழ்நாட்டுக்குச் சென்றுவிட்டார். அங்கு அவருக்கு இருக்கும் முக்கியமான வேலை. சுவாமி பிரேமானந்தாவின்ஆச்சிரமத்திற்குச் சென்று ஆன்மீக அனுபவத்தைப் பெறுவது.

பிரேமானந்தா யார் என்பது உங்களில்பருக்குத்தெரிந்திருக்கும். பலருக்குத் தெரியாமலேயே இருக்கும். இலங்கையின் மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் பிரேமானந்தா. மலையகத்தில் சிறு ஆச்சிரமம் ஒன்றையும் வைத்திருந்தார். இனப்பிரச்சினை தொடங்கியதும் 80களில் இந்தியாவிற்குச்சென்றார். தமிழ்நாட்டின்திருச்சியில்ஆச்சிரமம் அமைத்துத் தங்கினார். அவரது ஆன்மிகப் பயணம் அங்கு கொடிகட்டிப் பறந்தது. 150 ஏக்கர் நிலத்தில் பெரிய ஆச்சிரமம் அமைக்கப்பட்டது. வெளிநாடுகளில் எல்லாம் கிளைகள் திறக்கப்பட்டன.

பெரிதாக வளர்ந்தாலே சர்ச்சைகளும் கூடவே வருவது இயல்புதானே. பிரேமானந்தா மீதும் பல குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. பாலியல் குற்றங்கள்இ கொலைக் குற்றம்இ மோசடிக் குற்றம் என்று பல குற்றச்சாட்டுக்கள் எழுந்த நிலையில்இ தமிழ்நாடு காவல்துறையினர் அவர் மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர். இறுதில் நீதிமன்றம் அவரைக் குற்றவாளி என்று தீர்ப்பளித்து இரட்டை ஆயுள் தண்டனையும் விதித்தது.

சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த சாமியார் பிரேமானந்தாஇ 21 பெப்ரவரி 2011 மஞ்சள் காமாலை நோய் வந்து வைத்தியசாலையிலேயே உயிரிழந்தார். அந்தச் சாமியாரின் தீவிர பக்தரான விக்னேஸ்வரன்இ அதனால் சர்ச்சைகளுக்குள்ளும் சிக்கியவர். எனினும் தனது பக்த விசுவாத்தை அவர் அரசியலுடன் போட்டுக் குழப்பிக்கொள்வதில்லை என்பதால் இதோ இப்போதும் அந்தச் சாமியாரின் ஆசிகளைப் பெறுவதற்காக அவரது ஆச்சிரமத்திற்குச் சென்றுள்ளார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பொருளாதாரத்தைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றி பெறும் வேட்பாளர் ஒருவரை எமது கட்சியிலிருந்து முன்னிறுத்துவோம். அந்த வேட்பாளர் யார் என்கிற பெரும் கேள்வி உள்ளது. சில பெயர்கள் உள்ளன.

தொழில்வல்லுநர்கள், வர்த்தகர்கள், அரசியல்வாதிகள் அதேபோன்று எமது கட்சியுடன் இணைந்து செயற்படவிரும்பும்சிலரும்இருக்கின்றனர்.

இவர்களில்இருந்துசிறந்தஒருவரை நாடும்இ நாட்டு மக்களும் கோரும் விதத்திலும் பொருளாதாரத்தை பலப்படுத்தக்கூடிய ஒருவரை முன்னிறுத்துவோம்.

அடுத்த தேர்தல் வரையிலேயே தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கியுள்ளோம்.

தனி ஒருவரை மையப்படுத்தி அவர் எமது கட்சி இல்லை என்பதா அல்லது ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து எதிர்காலத்தில் பயணிப்பதா என்பது தொடர்பிலும் கலந்துரையாடவேண்டும்.

பொது ஜன பெரமுன என்பது அரசியல் கட்சியாகும். கட்சி என்ற வகையில் கட்சியுடன் கலந்துரையாடுவோம். அதற்கு புறம்பாக தனி ஒருவரை மையப்படுத்தி நாம் செயற்படமாட்டோம் என்றார்.

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன்துறைக்கு அழைத்து வந்து விசாரணைகளுக்கு பின்னர் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினர் ஊடாக ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கடற்படையினர் நேற்றுத் தெரிவித்தனர்-

## சர்வதேச நீர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலக்கின் கீழ் சுத்தமான குடிதண்ணீர், சுகாதாரம் என்பவற்றை அனைவருக்கும் வழங்குவதற்கு நாட்டின்பொருளாதாரசிக்கல்களுக்கு மத்தியில்பல்வேறுசிரமங்களுக்கும் முகம் கொடுத்தோம்.

இந்தச் சவாலை அடைவதற்கு தேவையான புதிய விடயங்கள்இ பொதுமக்களின்பங்களிப்புஇமற்றும் தொழில்நுட்பம் என்பவற்றை எவ்வாறு உள்ளடக்குவது போன்ற விடயங்கள் இந்த மாநாட்டில் கலந்துரையாடப்படவுள்ளன.

இம்மாநாடுஇரண்டுநாட்களைக் கொண்டது. இம்மாநாட்டின் பிரதம அதிதியாகஇபிரதமர்மற்றும்இஉலக வங்கியின் சார்பாக சரோஜ்குமார்ஜா ஆகியோர்கலந்துகொள்ளவுள்ளனர். சரோஜ் குமார் இலங்கையின் நீர் வளத்திற்கு பல உதவிகளையும் செய்துள்ளார்.

இதுவரையிலும் இந்த நீர் வழங்கல் துறையைப் பயன்படுத்தி அரசியல் மயமாக்கி பல்வேறு விடயங்களை மேற்கொள்ள முடியுமானதருணத்தில்கூடஅநேகமானோர் அதனைக் கைவிட்டுள்ளனர்.

எதிர்காலத்தில் ஒரு நிலையான திட்டம் கொண்ட பொறிமுறையொன்றைக் கொண்டு வந்தால்இ கட்டாயமாக இலங்கை வாழ் சகல மக்களுக்கும் எங்களால் நீரை வழங்க முடியும். இந்த மாநாட்டின் மூலம் நாம் எதிர்பார்ப்பதும் இதுவாகும்.

அத்துடன்இநீர்வழங்கல்மற்றும் வடிகாலமைப்பு சபை ஊடாக பல்வேறு மறுசீரமைப்புக்களை கொண்டுவந்துள்ளோம். எனவே அதற்காக உங்கள் அனைவரது ஆதரவையும் எதிர்பார்க்கின்றோம். இதன்மூலமாகநாட்டிற்குகட்டாயமாக பொருளாதார பாலத்தையும் தெிர்பார்க்க முடியும் என்றார்.

## தொல்பொருள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினரையும் அழைத்துச் சென்று கட்டுமானங்களைச் செய்தவராக உள்ளார்.

ஆகவே அமைச்சருக்கு எதிராக சட்டநடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும். அமைச்சரின் செயற்பாடு காரணமாகவே ஒரு மாவட்டநீதிவான்நீதிமன்றநீதிபதியே நாட்டை விட்டு வெளியேறும் நிலைமைக்கு உள்ளாகியுள்ளார் என்றார்.

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணக்கெடுப்பு மற்றும் மதிப்பீடு செயல்முறை முன்னோக்கி கொண்டு வரப்பட்டது. 1923 இல்இ மதிப்பீட்டாளர் பதவி உருவாக்கப்பட்டது.

1972இல் அறிமுகப்படுத்தப்பட்ட நிலக் கொள்கையின் மூலம் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பங்கு மேலும் விரிவாக்கப்பட்டது. அதன்படி மதிப்பீட்டுத் திணைக்களம் தற்போது புதிய யுகத்தில் நுழைந்துள்ளது.

அங்கு டிஜிட்டல் மயமாக்கல் மிகவும் முக்கியமானது. டிஜிட்டல் பொருளாதாரத்தில் மதிப்பீடுகளுக்குமனிதவளம்தேவைப்படுகிறது. அதற்காக மதிப்பீட்டாளர்களை உருவாக்கும் வகையில் பல்கலைக்கழகங்களில் மாணவர்களை உள்வாங்குவதை அதிகரிக்க வேண்டும்.

எதிர்காலத்தில் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை சொத்து மதிப்பீடு செய்யப்பட வேண்டும். வரி வசூலிக்கும் முறைக்கு மதிப்பீட்டின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. எனவேஇ இந்த ஆண்டு முதல் மதிப்பீட்டு செயல்முறை டிஜிட்டல் மயமாக்கப்படுவதை வரவேற்கிறேன்.

கடந்த ஆண்டு நாம் நாடென்ற வகையில் பெரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டோம். அந்த நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதில் அரச அதிகாரிகளும்இமுழு நாட்டு மக்களும் பெரும் தியாகங்களைச் செய்தனர். அதற்காக நாம் அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

இம்மாத நடுப்பகுதியில்இ நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் அறிவிக்க உள்ளது. ஆனால் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த புதிய பொருளாதார முறைகளின்படி முன்னேற வேண்டும். அப்படி இல்லாமல்இ பழைய பொருளாதார முறைகளை அமுல்படுத்தினால்இ அடுத்த 10 ஆண்டுகளுக்குள் நாட்டில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதை தடுக்க முடியாது.

மத்திய வங்கி ஏற்கனவே பணம் அச்சிடுவதை நிறுத்திவிட்டது. அத்துடன் அபிவிருத்திக்காக அரச வங்கிகளில் இருந்து கடன் பெறுவதும் நிறுத்தப்பட்டுள்ளன. இந்த நிபந்தனைகள் இல்லாமல் பொருளாதார முன்னேற்றத்தை எட்ட முடியாது. நாட்டுக்கு நிதி ஒழுக்கம் தேவை. பொருளாதாரத்தை நிதி ஒழுக்கத்துடன் நிர்வகித்தால்இ எதிர்காலத்தில் மக்களுக்கு அதிக நிவாரணங்களை வழங்க முடியும்.

இறக்குமதிக்கும் ஏற்றுமதிக்கும் இடையிலான இடைவெளி மற்றும் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை இந்த நாட்டில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. எனவேஇ ஏற்றுமதிவருவாயைஅதிகரிக்கவும்இ அரசின் செலவினங்களை குறைக்கவும்இ அரசின் வருவாயை அதிகரிக்கவும் புதிய திட்டங்களை தயாரித்துள்ளோம்.

சுற்றுலாத் துறையின் மூலம் அதிக அந்நியச் செலாவணியை ஈட்ட முடியும். அடுத்த ஆண்டு 25 லட்சம் சுற்றுலா பயணிகளை இலங்கைக்கு அழைத்து வர திட்டமிட்டுள்ளோம். சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 50 இலட்சமாக உயர்த்தினால் இந்நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்கு விரைவான தீர்வுகளைப் பெற முடியும் என நம்புகின்றோம்.

இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 3 இலட்சம் ஏக்கர் நிலத்தை மக்களுக்கு பயிர்ச்செய்கைக்காக வழங்க முன்மொழியப்பட்டுள்ளது. அந்த இலக்கை அடைவதில் மதிப்பீட்டுத் துறைக்கு பெரும் பங்கு உள்ளது. மதிப்பீட்டுத் திணைக்களம் டிஜிட்டல் மயமாக்கல் பணியை சிறப்பாகச் செய்யும்.

எரிசக்தி துறையிலும் புதிய அணுகுமுறைகள் அவசியம். புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். காற்றாலை மூலம் 35 கிகாவோர்ட்டும்இ சூரிய சக்தி மூலம் 200 கிகாவோர்ட்டும் மின் உற்பத்தி செய்ய முடியும். இந்த நாட்டில் நுகர்வுக்கு 50 கிகாவோர்ட்டினை விட குறைவாகவே மின்சாரம் தேவைப்படுகிறது.

எனவேஇ எரிசக்தி துறையின் ஊடாகவும் அதிக அந்நியச் செலாவணியை ஈட்ட முடியும். செயற்கை நுண்ணறிவு குறித்தும் அதிக கவனம் செலுத்தப்பட்டுஇ டிஜிட்டல் பொருளாதாரத்தில் அதைப் பயன்படுத்துவதற்கான திட்டங்களை உருவாக்க வேண்டும்.

மிகக் குறுகிய காலத்தில் நாட்டில் வலுவான பொருளாதாரத்தை உருவாக்க முடியும் என்றார்.

## பௌத்தம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்களைத் திறந்து பாருங்கள்.

இந்த நாட்டில் பெரும்பான்மையின மக்கள் பௌத்தர்களாக உள்ளனர். அவர்களுக்கான அமைச்சு திணைக்களம் உள்ளிட்டவை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.ஆனால் இந்த நாட்டில் வாழுகின்ற இந்து, கத்தோலிக்க, இஸ்லாமிய மக்களுக்காக தனியான அமைச்சுக்கள் கிடையாது. திணைக்களங்கள் காணப்பட்டாலும் அதற்காக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுவது கிடையாது. அவை பாரபட்சத்துக்கு உள்ளாக்கப்படுகின்றன.

ஏற்கனவே இந்துகலாசார அமைச்சொன்று நாட்டில் காணப்பட்டது. அதனை தற்போது அடையாளம் தெரியாது அழித்து விட்டீர்கள். இதன் மூலம் இனஇமதவாத வக்கிரம் வெளிப்பட்டுள்ளது.

## டெங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரவல் அதிகரித்து வருவதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டதோடு அரச நிறுவனங்கள்இ படகு துறைகள்இ பாடசாலைகள் போன்ற பொது இடங்களில் குடம்பிகள் பெருக்கம் அதிகரித்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இந்தநிலைமையைகட்டுப்படுத்த முப்படையினரின் உதவியுடன் விரைவான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சாகலரத்நாயக்க பொலிசாருக்கு அறிவிறுத்தினார்.

நோய்ப் பரவலை கட்டுப்படுத்துவதற்கு அவசியமான விரைவான நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்க நிறுவனங்களை அறிவுறுத்தும் வகையில் ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து அறிவிப்பொன்றை விடுக்கவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

அதேபோல் பொலிஸார் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியன இணைத்து இது தொடர்பில் மக்களை தெளிவுபடுத்துவதற்கான விரைவானவேலைத்திட்டம்ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என்றும் சாகல ரத்நாயக்க அறிவுறுத்தினார்.

இந்தச் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை ஆராய்வதற்கான திங்கட்கிழமையன்று டெங்கு ஒழிப்பு பிரிவை மீண்டும் கூட்டவும் தீர்மானிக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் (ஓய்வு) ஜெனரல் கமல் குணரத்ன, பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் உள்ளிட்டவர்களும் சுகாதார அமைச்சு, கல்வி அமைச்சு கொழும்பு மாநகரசபையின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

## 3 பொலிஸார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரையில் பொலிஸ் நிலையத்தில் கடையாற்றிய பெண் பொலிஸ் உத்தியோகஸ்தர் உள்ளிட்ட மூன்று பொலிஸார் தமது சாட்சியங்களைப் பதிவு செய்தனர்.

அத்துடன் உயிரிழந்த இளைஞனின் சகோதரி மற்றும் அலெக்ஸுடன் ஒரே மறியலில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த இளைஞனும் மன்றில் தோன்றி சாட்சியம் அளித்தனர்.அதனை அடுத்து வழக்கினை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு நீதவான் ஒத்திவைத்தார். அதேவேளை வெள்ளிக்கிழமை அடையாள அணிவகுப்புநடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மூவர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்பு பிரிவினரே மூவரையும் கைது செய்தனர்.

தாக்குதலுக்குப் பயன்படுத்திய ஹயஸ் வாகனம் மற்றும் இரண்டு வாள்களும்சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன என்றும் சம்பவத்துடன்தொடர்புடையமேலும் மூவர் தேடப்பட்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை தெல்லிப்பழையில் ஹயஸ் வாகனம் ஒன்றில் வந்த கும்பல் வீதியில் மோட்டார் சைக்கிள்களில் பயணித்த இளைஞர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியது. அதில் ஒருவர் காயமடைந்தார்.

தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பிச் சென்றவர்களைத் துரத்திச் சென்று பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியபோதும்இ அவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்பு விசாரணை பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ரி.மேனனின் கீழ் உள்ள உபபொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

விசாரணைகளின்அடிப்படையில் சந்தேகநபர்களை கிளிநொச்சிப் பகுதியில் வைத்து நேற்றுக் கைது செய்தனர்.

6 மாதங்களுக்கு முன்னர் தெல்லிப்பழை பகுதியில் வைத்து ஒருவர் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பழிவாங்கும் நோக்குடன் இந்தத்தாக்குதல்நடத்தப்பட்டுள்ளமை ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஹையஸ்வாகனத்தின்ரயர்மீது துப்பாக்கிச்சூடுநடத்தப்பட்டநிலையில் அந்த ரயர் மாற்றப்பட்டதுடன் சூடு பட்ட அடையாளங்களை மறைக்க ஏனைய பாகங்களை மாற்றவும் முயன்றுள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

தலைமறைவாகியுள்ளமூவரைக் கைதுசெய்யும்நடவடிக்கைகள்முன்னெடுக்கப்படுகின்றன என்றும்இ கைது செய்யப்பட்டவர்கள் சட்ட நடவடிக்கைக்கான இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## இல்லாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

புத்தசாசன அமைச்சு இந்த நாட்டில்காணப்படுவதற்காகஏனைய மதங்களின்செயற்பாடுகள்கட்டுப்படுத்தப்படவில்லை. அவற்றுக்காக திணைக்களங்கள் உள்ளன.

குறிப்பாக இந்து சமயத்துக்கான இந்துகலாசார திணைக்களம் உள்ளது. ஏனைய மதங்கள் சுயாதீனமாகச்செயற்படுவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. ஆகவே எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏனைய மதங்களுக்கு தடைகள் ஏற்படுத்தப்படவில்லை.அடுத்த ஆண்டு இந்துகலாசார திணைக்களத்திற்கு அதிகளவான நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். பல்கலைக்கழக சட்ட பீடத்தில் தமிழ் மொழிக்கு அனுமதி வழங்குக

## சிறிதரன் வலியுறுத்தல்



யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் கல்வியியற் பீடத்தை ஆரம்பிப்பதற்கும், யாழ்.பல்கலைக்கழக சட்ட பீட மாணவர்கள் தமிழ் மொழியில் சட்டக் கல்வியைத் தொடர்வதற்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ஆசிரியர்களின் நலன்களுக்காகத் தேசிய கல்வி நிறுவனத்தின் கிளை நிறுவனத்தை முல்லைத்தீவு மாங்குளத்தில் ஸ்தாபிக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கல்வி செலவுத்தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

கிளிநொச்சிநாவலர்பண்ணை ஊற்றுக்குளம் பகுதியைச் சேர்ந்த செல்வி டிலானி ரவிச்சந்திரன் 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயர்தர பரீட்சையில் கணித பிரிவில் தோற்றி சித்தியடைந்து கிளிநொச்சி மாவட்டத்தில் 44 ஆவது நிலையைப் பெற்றார்.

கல்வித் தகைமைக்கு அமைய ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்துக்குத்தொழில்நுட்ப பிரிவுக்கு தெரிவானார். குடும்ப வறுமையால் அவரால் அப்போது பல்கலைக்கழகக் கல்வியைத்; தொடர முடியவில்லை.

அதனைத் தொடர்ந்து முறையான கல்வித் தகைமை உள்ளதால் இந்த மாணவி தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பித்துள்ளார்.

பல்கலைக்கழகத்துக்கு கல்வியைத் தொடர அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதால் தேசிய கல்லூரிக்கான கல்வியியற் கல்லூரிக்கான இவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது. இந்த மாணவியின் கனவுகள் இவ்வாறு இல்லாமல் போனதால் இவர் விரக்தியடைந்துள்ளதை அறிய முடிகிறது.

இந்த மாணவி தொடர்பில் கல்வி அமைச்சுக்கும்,பல்கலைக் கழகங்கள் மானியங்கள் ஆணைக்குவுக்கும் இரண்டு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளேன்.

ஆனால் இதுவரை எந்த பதிலும் கிடைக்கவில்லை.பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள பகுதியைச் சேர்ந்த மாணவிக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவி செய்ய வேண்டும்.2022 மற்றும் 2023 ஆகிய கல்வியாண்டு மாணவர்களுடன் ஒன்றிணைந்து இந்த மாணவி பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர வாய்ப்பளிக்குமாறு வினையத்துடன் கேட்டுக் கொள்கிறேன். - என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த,பல்கலைக்கழக ஆணைக்குழுவின் தலைவர் உட்பட அதிகாரிகள் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்துள்ளார்கள். ஆகவே குறிப்பிட்ட விடயங்களை என்னிடம் தாருங்கள் நான் அவர்களிடம் சமர்ப்பிக்கிறேன். -என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், நன்றி அமைச்சரே. அதேபோல் கிளிநொச்சி மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசமான ஜெயபுரம், பல்லவராயன் கட்டு, பூநகரி கிளிநொச்சியை சேர்ந்த செல்வி கோபிகா சுதர்ன் 2020 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சைக்குத் தோற்றி, உரிய பெறுபேற்றை பெற்றுக்கொண்டு பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பித்துள்ளார்.

பல்கலைக்கழக அனுமதி கிடைக்காததைத் தொடர்ந்து அவர் தமிழ்,இந்து நாகரிகம்,சமூகக் கல்வி ஆகிய பாடங்களுக்காக தேசிய கல்வியியல் கல்லூரிக்கு விண்ணப்பித்துள்ளார். இந்து நாகரிகம் பாடத்துக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து ஒருவர் தெரிவு செய்யப்படும் நிலையில் தனது பெறுபேற்றுக்கு அமையத் தனக்கு கல்வியியற் கல்லூரி கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்த மாணவிக்கு ஏமாற்றம் மிகுதியாகியுள்ளது.

வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் இந்து நாகரிகம், வரலாறு, சமூகக் கல்வி ஆகிய பாடங்களுக்கு மாத்திரம் 63 வெற்றிடங்கள் நிலவுகின்ற நிலையில் இந்தப் பாடங்களுக்கு ஆளணி வெற்றிடம் இல்லை என்று குறிப்பிட்டுக் கொண்டு தேசிய கல்வியியற் கல்லூரி இந்த மாணவியின் விண்ணப்பத்தை நிராகரித்துள்ளது.இதனால் இந்த மாணவி பாதிக்கப்பட்டுள்ள நிலையில்,கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வியும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த மாணவியை விடக் குறைந்த பெறுபேற்றைப் பெற்றவர்களுக்கு கல்வியியற் கல்லூரிக்கு அனுமதி கிடைத்துள்ளது.ஆனால் இந்த மாணவி விண்ணப்பித்த மூன்று பாடங்களுக்கும் அனுமதி கிடைக்கவில்லை.இந்த விடயங்கள் தொடர்பான ஆவணங்களை சபைக்கு சமர்ப்பிக்கிறேன். மனிதாபிமான அடிப்படையில் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் 'கல்வியியல் பீடம்' உருவாக்கப்படவில்லை. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் வடக்கு மற் றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய மிக முக்கிய பல்கலைக்கழகமாக உள்ளது.யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்வியியற் துறையை 'பீடமாக ' உருவாக்குமாறு கடந்த ஆண்டும் வலியுறுத்தினேன். ஆனால் இதுவரை அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை.

தேசிய கல்வி நிறுவகத்தின் கிளையை முல்லைத்தீவு மாங்குளத்தில் நிறுவுமாறு பலமுறை வலியுறுத்தியுள்ளேன்.தற்போதைய பொருளாதார சுமைகளுக்கு மத்தியில் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ளவர்கள் தமது துறைசார் நடவடிக்கைகளுக்காக தலைநகருக்கு வருவதால் பல சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். ஆகவே இந்தக் கோரிக்கை தொடர்பிலும் கரிசனை கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பேராதனை பல்கலைக் கழகத்தில் சட்ட பீட மாணவர்கள் தமிழ்,ஆங்கிலம் மற்றும் சிங்களம் மொழியில் கற்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் சட்ட பீட மாணவர்கள் தமிழ் மொழியில் சட்டக் கல்வியைத் தொடர வாய்ப்பில்லை. தமது தாய்மொழியில் சட்டக் கல்வியைத் கற்க எதிர்பார்க்கிறார்கள். ஆகவே அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1988 ஆம் ஆண்டு நான் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்ட பீடத்துக்குத் தெரிவானேன். அப்போதைய சூழ்நிலையால் என்னால் சட்டக் கல்வியைத் தொடர முடியவில்லை. சட்டக்கல்வி வாய்ப்பு யாழ்.பல்கலைக்கழத்தில் இருந்திருந்தால் நானும் ஒரு சட்டத்தரணியாகியிருப்பேன். ஆகவே தமிழ் மாணவர்கள் தமது தாய்மொழியில் சட்டத்தைக் கற்கும் வாய்ப்பை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். யாழ்.தீவக பாடசாலைகளில் சேவையாற்றும் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் கடினமான முறையில் தான் சேவையில் ஈடுபடுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு விசேட கொடுப்பனவுகளை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். - என்றார். (05)

# பாடசாலை மாணவர்களை தண்டிக்க முடியாத நிலைமையில் ஆசிரியர்கள்

## மைத்திரிபால சிறிசேன வருத்தம்



மனித உரிமைகள் என்று குறிப்பிட்டுக்கொண்டு ஆசிரியர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதால் மாணவர்களைதண்டிக்க முடியாத நிலைக்கு ஆசிரியர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

கடந்த காலங்களில் ஆசிரியர்கள் மீது மாணவர்களுக்கு இருந்த மதிப்பு மற்றும் கௌரவம் தற்போது இல்லை. சிறந்த தலைமுறைகளை உருவாக்க ஆசிரியர்கள் முயற்சித்தாலும் அதற்கு பல தடைகள் தற்போது காணப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் எவ்வாறு சிறந்த எதிர்கால தலைமுறைகளை உருவாக்க முடியும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கல்வி அமைச்சின் செலவுத்தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

நாட்டின்கல்விதுறையில்நகர்புறம், கிராமிய புறம் மற்றும் தோட்ட புறம் என்று வேறுபாடுகள் காணப்படுவதால் கொழும்பில் கல்விக்கான போட்டி அதிகளவில் உள்ளது.

பின்தங்கியுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை அந்தப் பிரதேசங்களின் ஏழ்மை நிலையை தீவிரப்படுத்துகிறது. அண்மையில் இடம்பெற்றதரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 99 சத வீதமானவர்கள் பரீட்சை முடிந்த பின்னர் வீட்டுக்கு அழுது கொண்டே சென்றார்கள்.

வினாத்தாள் கடினம் என்று மாணவர்கள் குறிப்பிட்டார்கள். சகல மாவட்டங்களிலும் இவ்வாறான தன்மையே காணப்பட்டது.

ஐந்தாம்தரபுலமைப்பரிசில்பரீட்சை பெறுபேறு வெளியான பிறகு ஒருசில பெற்றோர் முறையற்ற வகையில் நடந்து கொள்கிறார்கள். தனது பிள்ளை குறைவான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டால் அந்த பிள்ளையை நெருக்கடிக்குள்ளாக்குகிறார்கள்.

மிலேட்சத்தனமாகத் தாக்குகிறார்கள். இவ்வாறானசெயற்பாடுகளால் அந்தப் பிள்ளை உளவியல் ரீதியில் பாதிக்கக் கூடும்.

கடந்த காலங்களில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு வெளியாகிய பின்னர் குறைந்த புள்ளிகளைப் பெற்ற பிள்ளைகள் தற்கொலைசெய்துகொண்டசம்பவமும் நாட்டில் பதிவாகின.

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை பிள்ளைகளுக்கு பெரும் சுமையாகவே உள்ளது. எனது ஆட்சியில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையை இரத்து செய்வதற்கு நான் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தேன். ஆனால் அந்த முயற்சி வெற்றிபெறவில்லை.

முன்னேற்றமடைந்துள்ளநாடுகளில் எட்டாம் தரத்துக்குப்; பின்னரே பரீட்சைகள்நடத்தப்படுகின்றன.ஆனால் இங்கு தான் முதலாம் தரத்தில் இருந்து பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. இந்த முறைமை மாற்றம் பெற வேண்டும்.

ஆசியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையிலான உறவு நிலை தற்போது கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

மாணவர்களைத்தண்டிக்கமுடியாத நிலையில் ஆசிரியர்கள் உள்ளார்கள். மாணவர்களைத் தண்டித்தால் அவர்களின் பெற்றோர் மனித உரிமை என்றுகுறிப்பிட்டுக்கொண்டுபொலிஸில் முறைப்பாடளிக்கிறார்கள். அதன்பின்னர் ஆசிரியர் தண்டிக்கப்படுகிறார்.

ஆசிரியர்கள்மீதானமாணவர்களின் மதிப்பு மற்றும் கௌரவம் தற்போது முழுமையாக இல்லாதொழிந்துள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் எவ்வாறு சிறந்த எதிர்கால தலைமுறையை எதிர்பார்க்க முடியும். - என்றார். (05)

# கிரிக்கெட் நிர்வாகத்தின் கோடிக்கணக்கான பணத்தை பாடசாலை கிரிக்கெட்டின் விருத்திக்குப் பயன்படுத்துக

## சஜித் பிரேமதாஸ கோரிக்கை

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப நிகழ்ச்சிகளுக்காக பாடசாலைகளுக்குச் செல்லும் போது, நாட்டின் பாடசாலைக் கட்டமைப்பில் கிரிக்கெட் மீது அதீத ஆர்வம்இருப்பதைக்கண்டாலும்,அங்கு வளப்பற்றாக்குறை நிலவுவதாகவும், இந்த வளப்பற்றாக்குறைக்கு மாற்றாக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்குச் சொந்தமானபெரும்நிதியை முறையாக செலவிட்டு, பாடசாலை கிரிக்கெட்டை விருத்தி செய்யும் வேலைத்திட்டத்திற்குள் பிரவேசிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில் கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

இத்தருணத்தில், இந்நாட்டில் கிரிக்கெட்டில் ஊழல் மலிந்து கிடக்கிறது என்பது பல்வேறு அறிக்கைகள் மூலம் தெளிவாகத் தெரிய வந்துள்ளதாகவும், இதனாலயே இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தை மாற்ற வேண்டும் என்று 225 உறுப்பினர்களும்இணைந்துதீர்மானம் நிறைவேற்றினர் என்றும்,கிரிக்கெட் நிறுவனத்துக்குச்சொந்தமான பெறுமதியான வளங்களை நாட்டில் பாடசாலை கிரிக்கட் தொடக்கம் அனைத்து கிரிக்கெட் வாய்ப்புகளையும் அபிவிருத்தி செய்வதற்கு பயன்படுத்துமாறும், இந்த பணம் ஐசிசிக்கு சொந்தமாக பணம் இல்லை. இந்த பணத்தை பாடசாலை கிரிக்கட்டை அபிவிருத்தி செய்ய பயன்படுத்தினால் 96 ஆம் ஆண்டு போன்று உலகக்கிண்ண வெற்றிக் கனவுக்கு செல்ல முடியும் என்றும் தெரிவித்தார். (05)



# ஐயப்ப பக்தர்களுக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் விசாக்கள் அதிகரிப்பு

## ஜீவன் தொண்டமான் தகவல்

சபரிமலை யாத்திரை மேற் கொள்ளும் ஐயப்ப பக்தர்களுக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் விசாக்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொடுப்பதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அகில இலங்கை மலையக ஐயப்ப ஒன்றியத்தின் நிர்வாக குழுவினருக்கும், அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் இடையிலான கலந்துரையாடல் அமைச்சில் நடைபெற்றது.

இதன்போது ஐயப்ப பக்தர்களுக்கு நாளொன்றுக்கு 100 விசாக்கள் மட்டுமே வழங்கப்படுகின்றன, அதன் செல்லுபடிகாலம் ஒரு மாதமாக உள்ளது. எனவே, விசாக்களையும், கால எல்லையையும் அதிகரித்து தருமாறு ஒன்றியத்தினர் கோரிக்கை விடுத்தனர். இதனையடுத்து இலங்கைக்கான இந்திய தூதவர் கோபால் பாக்லேவை தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான், இது தொடர்பில் பேச்சு நடத்தினார்.

இதன்பலனாக நாளொன்றுக்கு வழங்கப்படும்விசாக்களின்எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், செல்லுபடியாகும் கால எல்லையை 2 மாதங்களாக அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமது கோரிக்கையை ஏற்று உரிய நடவடிக்கை எடுத்த அமைச்சர் ஜீவன்தொண்டமானுக்கு, இலங்கை மலையக ஐயப்ப ஒன்றியத்தினர் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பயங்கரவாதமும் நினைவேந்தலும்

மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரிரான் அலஸ் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த தென்னக்கோன்.

போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்வது என்ற பெயரில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை நினைவுகூர்வதற்கு அனுமதிக்க முடியாது என்று அமைச்சர் ரிரான் அலஸ் தெரிவித்திருந்தார். மாவீரர் நாள் நிகழ்வுகளை நடத்துவோர் மீது பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் தெரிவித்திருக்கிறார். அதற்கும் ஒரு படி மேலே சென்றுஇ மாவீரர் தின நிகழ்வுகள் கவலை அளிக்கின்றன என்று இராஜாங்க அமைச்சர் தென்னக்கோன் தெரிவித்திருக்கிறார்.

“வடக்கில் கடந்த நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் தின நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துக்கொண்ட சிறுவர்கள் சிலர் விடுதலை புலிகள் அமைப்பினரின் ஆடைகளைபோல் ஆடை அணிந்திருந்தனர். சிறுவர்களின் கழுத்தில் சைனட் குப்பிக்கு ஒப்பான பொருளையும் அணிவித்துஇ குறித்த சிறுவர்களைப் பயங்கரவாதிகளாக்கி இருந்தனர்.

இவ்வாறானதொரு சம்பவம் மீண்டும் நாட்டில் இடம்பெற்றிருக்கக்கூடாது. போர்க் காலத்தில் விடுதலை புலிகள் அமைப்பினரே சிறுவர்களை போரில் இணைத்துக்கொண்டனர். மூன்று தசாப்த போரில் நாம் இன்னும் பாடம் கற்றுக்கொள்ளவில்லை. அதனாலேயே சிறுவர்கள் பயங்கரவாதிகளாக சித்தரிக்கப்பட்டு பயங்கரவாதிகள் நினைவுகூரப்படுகின்றனர். இந்த சம்பவம் மிகவும் கவலையளிக்கிறது” எனத் தெரிவித்தார்.

ஆனால்இ மறுபுறத்தில் நினைவேந்தல்களை யாரும் தடுக்க முடியாது என்று அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறினாலும் வடக்கு கிழக்கில் பொலிஸார் தீவிரமாக மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு முன்னின்றார்கள் என்பதன் பின்னணி இப்போது தெரிகின்றது. தமிழர்கள் விடயம் என்று வருகின்றபோதுஇ அரசுத் தலைவரின் சொல்லுக்கும் எந்த மதிப்பும் இல்லை என்பதை ஆளும் தரப்பினர் தெளிவாக நிரூபிக்கின்றார்கள்.

இந்த நாட்டின் மக்கள் கூட்டத்தினரில் ஒரு பகுதியினர் விடுதலைப் போராளிகள் என்று கருதுகின்ற தங்களின் சொந்தங்களை பயங்கரவாதிகள் என்று கூறும் அதே அரசு தமிழர்களுக்கு எதிராகவும் அரச பயங்கரவாதத்தைப் போரின்போது கட்டவிழ்த்து விட்டிருக்கின்றன. இறுதிப் போரின்போது உலகமே ஏற்றுக்கொண்ட மனித உரிமைமீறல்களிலும் போர்க் குற்றங்களிலும் ஈடுபட்டிருக்கின்றனர். ஆனாலும் அவர்களை வீரர்களாகப் போற்றுகின்றனர்.

இப்படி இருதரப்பிலும் பயங்கரவாதச்செயல்கள் இடம்பெற்றுள்ள நிலையில்இ அமைச்சர்கள் ஒரு தரப்பினரை மட்டும் பயங்கரவாதிகளாச் சித்தரித்து அவர்களை நினைவேந்துவதைத் தடுக்க முற்படுவது இன நல்லிணக்கத்துக்கும் அமைதிக்கும் உதவப்போவதில்லை. அமைச்சர்கள் அடுத்தவர்களைக் குற்றஞ்சாட்டுவதற்குமுன்பாகத் தமது முதுகில் இருக்கும் அழுக்கை முதலில் திரும்பிப் பார்க்கவேண்டும்.

# ரஜரட்ட இளவரசர்களின் சாகசம்



உபுல் யோசப் பெர்னான்டோ

சிங்கள வரலாற்றாசிரியர்களின் கூற்றுப்படி இலங்கையின் முதல் இராச்சியம் ரஜரட்ட. முதல் இராச்சியத்தின் தலைநகரம் அனுராதபுரம். 1017 சோழ மன்னன் இராஜராஜன் அனுராதபுர இராச்சியத்தை அழித்து பொலன்னறுவையில் தனது அரசை நிறுவினான். பின்னர் பொலன்னறுவை தலைநகரானது. பின்னர், ராஜராஜனின் மகனின் இராணுவம் விரட்டியடிக்கப்பட்டு, பொலன்னறுவை இராச்சியத்தை மன்னர் விஜயபாகு கைப்பற்றினார், ஆனால் அவர்கள் ராஜ்யத்தை மீண்டும் அனுராதபுரத்திற்கு கொண்டு செல்லவில்லை. ராஜராஜன் அனுராதபுர இராச்சியத்தை மீண்டும் பயன்படுத்த முடியாதபடி அழித்ததால் பொலன்னறுவையை தங்கள் ராஜ்ஜியமாகவும் தலைநகராகவும் ஆக்கினர்.

பின்னர் பொலன்னறுவை மீது இந்தியாவின் ஒரிசாவைச் சேர்ந்த கலிங்க மாகாவால் படையெடுக்கப்பட்டது. அவரும் அவரது இராணுவமும் பொலன்னறுவை கோவில்களை அழித்து கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். இதன்போது ரஜரட்ட மக்கள் ரஜரட்டையைவிட்டு வெளியேற ஆரம்பித்தனர்.



நாயக்க தேரர்களே முதலில் பல்லக்குகொண்டுஓடினர். பின்னர் மக்கள் ஓடிவிட்டனர். கலிங்கமாகாவிடம் இருந்துநாட்டைக்காப்பாற்றி அரசனாகிய மூன்றாவது விஜயபாகு, யாப் பஹூவை தனது ராஜ்யமாக்கினார். பொலன்னறுவை மட்டுமன்றி ராஜரட்டவும் காடாக மாறியது. பின்னர் இலங்கையை ஆக்கிரமித்த போர்த்துகீசியர்கள், ஒல்லாந்தர்கள் மற்றும் ஆங்கிலேய படையெடுப்பாளர்கள் காட்டு ரஜரட்டா இராச்சியத்தில் கால் பதிக்கவில்லை.

கலிங்க மாகாவுக்குப் பிறகு ராஜரட்டத்தில் கால் பதிக்கிறார் டி.எஸ். சேனநாயக்கா இலங்கையின் பொருளாதாரத்தின் இதயம் ரஜரட்ட என்பதை அறிந்த டி.எஸ். காடுகளில் தேடி, குடியேற்றத்திற்கு ஏற்ற நிலத்தைக் கண்டுபிடித்தார். டி.எஸ். குடியேற்றப் பரப்புரைகள் ஆரம்பிக்கப்பட்டு தெற்கிலிருந்து மக்கள் அழைத்துச் செல்லப்பட்டு ரஜரட்டவில் குடியேற்றப்பட்டனர். மக்கள் டிஎஸ்ஸை பராக்கிரம பாகுவின் அவதாரம் என்று அழைத்தனர். டி.எஸ்.இன் இறப்பிற்குப் பின்னர், ரஜரட்டவுக்குப் பிறந்த சமீபத்திய தலைவர் மின்னேரி தேவியோ என்று அழைக்கப்படும் சி.பி. டி சில்வா. அவர் 1956இல் பண்டாரநாயக்க ஆட்சியில் இரண்டாவது இடத்தில் இருந்தார். துணைப் பிரதமராகத் தோன்றியவர். ஆனால் பண்டாரநாயக்காவின் படுகொலைக்கு முன்னர், பண்டாரநாயக்காவின் எதிரிகள்



கொடுத்த விசம் கலந்த பாலை ஒரு கிளாஸ் குடித்து, நோய்வாய்ப்பட்டு பிரித்தானியாவுக்கு சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டதால், அவரால் பிரதமராக முடியவில்லை. தஹாநாயக்க பிரதமரானார்.

பண்டாரநாயக்கவின் படுகொலையின் பின்னர், அவர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரானார். மார்ச் 1960 பொதுத் தேர்தலுக்கு அவர் தலைமை தாங்கினார். அந்தத் தேர்தலில் ஐதேக அரசு அமைந்தாலும் பெரும்பான்மை இல்லை. அரசு சமாளித்தது. ஆனால் அதேயாண்டு ஜூலையில் மீண்டும் தேர்தல் வந்தது. அந்தத் தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குத் தலைமை தாங்கிய திருமதி பண்டாரநாயக்காவிடம், சி.பி. டி சில்வா கட்சியின் தலைமைப் பொறுப்பை எந்தவித பாதிப்பும் இன்றி ஒப்படைத்தார். சிறிமாவோ கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று பிரதமரானார். இருந்தாலும் டி சில்வா பண்டாரநாயக்கா குடும்பத்தினரால் புறக்கணிக்கப்பட்டார். சிறிமாவை பிரதமராக்குவதற்காக பண்டாரநாயக்க குடும்பத்தினர் சி.பியை ஒதுக்கினார்கள். திருமதி பண்டாரநாயக்கவோ சி.பி.யைத் தனக்குக் கீழே கொண்டவரப் பார்த்தார். இதைப் பொறுத்துக்கொள்ள முடியாத சி.பி. இனிக் கட்சியில் தனக்கு இடமில்லை என்பதை நன்கு உணர்ந்தார். அதனால் ஐதேகவுடன் இணைந்து அம்மையாரின் அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்கிறார். 1964 இல், அவரது அரசு அந்தக் கிளர்ச்சியால் வீழ்த்தப்பட்டது. 1965 பொதுத் தேர்தலில் திருமதி பண்டார நாயக்கவின் அரசு தோல்வி யடைந்தது.

சி.பிக்குப் பின்னர் ராஜரட்டவில் இருந்து உருவாகிய புதிய தலைவர் மைத்திரிபால சேனாநாயக்க. 1970 முதல் 1977 வரையான ஆட்சியில் அவர் துணைப் பிரதமராகப் பதவி வகித்தார். சிறிமாவோ நாட்டில் இல்லாத காலத்தில் அவர்தான் கட்சியைப் பார்த்துக்கொண்டார். ஆனால் அவர் கட்சியின் தலைமைப் பதவியில் தனக்குப் போட்டியாக வருவார் என்று அச்சப்பட்ட சிறிமாவோ, பட்டத்து இளவரசரான அனுர பண்டாரநாயக்கவை கட்சிக்குள் முதன்மைப்படுத்தினார்.

1977 தேர்தல் தோல்வியின் பின்னர், மைத்திரிபால பண்டாரநாயக்கா - ரத்வத்த குடும்பத்தின் ஆட்சிக்கு எதிராக மைத்திரிபால சேனநாயக்க பட்டத்து இளவரசர் அனுரவுடன் இணைந்து கிளர்ச்சி செய்தார். அன்று முதல் கட்சி அழிந்து விட்டது. சேனநாயக்கவிற்குப்பிறகு சிறீ லங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து புதிய தலைவர் ஒருவர் வந்தார். அவர்தான் மைத்திரிபால சிறிசேன. சந்திரிகாவின் ஆட்சியில் அவர் முதன்மை பெற்றாலும் மகிந்தவின் ஆட்சியில் ஓரங்கட்டப்பட்டார். திருமதி பண்டாரநாயக்காவைப்போலவே மகிந்தவும் தனது குடும்பத்தை முடிக்குரியதாக்குவதற்காக மைத்திரிபாலவை ஓரங்கட்டினார். இதனால் சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் தனக்கு எதிர்காலம் இல்லை என்பதை உணர்ந்த மைத்திரிபால, 2015 ஜனாதிபதி தேர்தலில் ஐதேகவுடன் சேர்ந்து ஒட்டுமொத்த ராஜபக்ச குடும்பத்தையும் பயமுறுத்தினார்.

இந்த நேரத்தில் மைத்திரியுடன் மோதத் துணிந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு மூன்று பேர்தான் இருந்தார்கள். அவர்களில் ரஜரட்டையில் பிறந்த ரொான் ரணசிங்கதான் ஹீரோ. ஜனாதிபதியாகவும் கட்சித் தலைவராகவும் இருந்தபோதே மைத்திரியை வீழ்த்தினார். மைத்திரி - ரணில் அரசு ஒன்றன்பின் ஒன்றாக வீழ்ந்த போது மீண்டும் ராஜபக்சக்கள் தலைதூக்கினார்கள். 2019 ஜனாதிபதித் தேர்தலிலும் 2020 பொதுத் தேர்தலிலும் வெற்றி பெற்ற ராஜபக்ச ரொானுக்கு உரிய இடத்தை வழங்கவில்லை. போராட்டம் வருவதற்கு முன், கோத்தாவின் இயற்கை உரக் கொள்கையால் ஆதரவற்ற ரஜரட்ட விவசாயியை வழிநடத்த, தனக்கு வழங்கப்பட்ட இராஜாங்க அமைச்சர் பதவியைத் தூக்கி எறிந்தார் ரொான். அதன் பிறகுதான் கோத்தாவுக்குத்

அவரது மதிப்பும் புகழும் தெரிந்தது. ராஜபக்ச குடும்பத்தையோ குடும்ப அடியாட்களையோ அமைச்சரவையில் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று தெரிவித்து, மக்கள் போராட்டத்திற்கு தலைவணங்கி ரொஷானை அமைச்சரவைக்கு அழைத்துச் சென்றார். கோத்தா நாட்டை விட்டு வெளியேறிய போது, ஜனாதிபதியாகப் பதவியேற்க விரும் பிய ரணில் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தனது வீட்டில் சந்தித்தார். ரொஷான் அவர்களில் முதல் ஆளாக இருந்தார். ரணில் பதவிக்கு வருவதற்கு முழுத் துணையாக இருந்தார். ஆனால் அந்த நட்பு நீண்ட காலம் நீடிக்கவில்லை. பண்டாரநாயக்க-மற்றும் டி சில்வா, மைத்திரிபால முதல் சேனாநாயக்க வரை, ராஜபக்சே முதல் ரணில் ரொஷான் வரை எல்லோருக்கும் நடந்தது ஒன்றேதான்.

சி.பி. டிசில்வா அல்லது மைத்திரிபால சேனநாயக்கா அல்லது மைத்திரிபால சிறிசேன ஆகியோர் அரசுக்குள் இருக்கும்போது தமது தலைவர்களை எதிர்க்கப் பயந்தனர். ஆளும் தரப்பை விட்டு வெளியே வந்ததும் தாக்குதல்களைத் தொடங்கினர். ஆனால் ரொஷான் மாறுபட்டவர். ஆட்சியில் இருந்தபோதே - அமைச்சராக இருந்தபோதே - தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகக் குரல் கொடுப்பவர். இலங்கைக் கிரிக்கெட்டுக்குள் நடக்கும் ஊழலுக்கு எதிராகத் துணிந்து குரல்கொடுத்தார். ரணில் அவரை பதவி நீக்கம் செய்தபோது அவருக்கு ஆதரவாக நிற்க ராஜபக்வோ அல்லது பொதுஜன பெரமுனாவோ வரவில்லை.

சிறி லங்கா சுதந்திரக் கட்சி சி.பி. டி சில்வா, மைத்திரிபால சேனாநாயக்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்குச் செய்த அதே வரலாற்றுத் தவறை ரொஷான் ரணசிங்கவுக்கும் செய்தது. ரஜரட்ட இளவரசர்களின் கிளர்ச்சியினால்தான் அரசியலில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தோல்வியடைந்தது, 2015 இல் ராஜபக்ச தோல்வியடைந்தார். ‘ரணில் ராஜபக்ச கூட்டணி ஆட்சியை ரஜரட்ட இளவரசன் வீழ்த்தினார் என்று வரலாறு சொல்லுமா...?”

ரஜரட்ட இளவரசர்களின் கிளர்ச்சி வரலாறு மெய்யாக இருந்தால், மற்றொரு அரச புரட்சிக்கு நாடு தயாராக இருக்கின்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# 13 ஆவது திருத்தம் தீர்வை நோக்கிய தொடக்கம் என்பது நிதர்சனமாகிறது

## ஈ.பிடி.பியின் ஊடக பேச்சாளர் ஸ்ரீரங்கன் எடுத்துரைப்பு



அழிந்துபோயிருந்த 13 ஆவது திருத்தச்சட்டம் பேசாப் பொருளாகியிருந்தநிலையிலும்தொடர்ச்சியாக நாடாளுமன்றத்திலும் அறிக்கைகள் மூலமும் தமிழர்களின் அரசியல் தீர்வுக்கு 13 ஆவதுதிருத்தச்சட்டம்தான் தீர்வை நோக்கிய ஆரம்பப்படி என நாம் வலியுறுத்திவந்தது நிதர்சனமாகி வருவதாக ஈழ மக்கள் ஜநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளரும் யாழ். மாவட்ட உதவி நிர்வாக செயலாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்மார்.

யாழ் ஊடக அமையத்தில் நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சமீபத்தில் புதுடில்லியில் சில இந்து அமைப்புகள் புலம்பெயர் சிவில் அமைப்பினர், வடக்கு கிழக்கின் சில அரசியல் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடி தமிழ் மக்கள் அரசியல் உரிமைபெற இந்திய இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியா தலையீடு செய்யவேண்டும் எனக் கூட்டாக வலியுறுத்தின எனச் செய்திகள் வெளியாகியிருந்தன.

முன்பதாக கிழக்கு மாகாணம் அரச தரப்பினரால் விடுவிக்கப்பட்டதும் தேர்தல் மூலம் மாகாண அதிகாரத்தை மக்களிடம் வழங்குமாறு நாம் கோரியிருந்தோம். குறிப்பாகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் வடக்கு - கிழக்கை சேர்ந்த 22 நாடாளு மன்ற உறுப்பினர்கள் அன்று நாடாளு மன்றத்தை அலங்கரித்திருந்தாலும் தனி ஒரு நபராக இருந்து அதனை நாம் வலியுறுத்தியிருந்தோம்.

இதேவேளை சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாட்டில் இலங்கையின் நிர்வாக அலகு மாவட்ட அலகாகவே இருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்தது. அதன் போது கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எவ்விதமான கருத்தையும் தெரிவித்திருக்கவில்லை.

ஆனால் எமது தலைவர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே குறித்த கருத்து சிறீலங்கா சுதந்திரக்க கட்சியின் நிலைப்பாடு என்றும் எமது நிலைப்பாடு இலங்கையின் நிர்வாக அலகு மாகாண நிர்வாக அலகாகவே இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தார்.

இதேபோன்று வடக்கு மாகாணத்திலும் பேசு பொருளாக இருந்த 13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்கின்ற நோக்கில் யார் ஆட்சிக்கு வருகின்றார்கள் என்பது முக்கியமல்ல மாகாண முறைமையைப் பாதுகாக்க வேண்டும். அது ஜனநாயக ரீதியில் மக்களிடம் ஆட்சி செய்ய வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கில் வடக்கு மாகாணசபை தேர்தலை நடத்துமாறும் வலியுறுத்தியிருந்தோம்.

தேர்தல் நடத்தப்பட்டு வடக்கு மாகாண சபையின் ஆட்சிக்கு விசேடமாக 5 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நிதி மத்திய அரசால் வழங்கப்பட்டது. ஆனால் குறித்த நிதியை ஆட்சி செய்தவர்கள் தமது இயலாமையால் முறையாக மக்களுக்கானதாகக் கொண்டு சேர்க்கவில்லை என்பதும் வரலாறு.

இதனிடையே மாகாணங்களுக்கு அதிகாரங்களைக் குறைப்பதற்கு ஜேவிபி, சிஹல உறுமய, ஜாதிக ஹெல உறுமய போன்ற தென்னிலங்கை இனவாதக் கட்சிகள் முயன்றபோதும் தென்னிலங்கையை சேர்ந்த சகோதர மொழி பேசும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் முஸ்லிம் மலையக கட்சிகளை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்புடன் 50 மேற்பட்ட கையொப்பங்களை பெற்று அந்த முயற்சியை தடுத்து நிறுத்தியிருந்தோம்.

நாட்டில் யுத்தம் வலுவாக இருந்த நிலையிலும் நாம் இதனையே வலியுறுத்தியிருந்தோம். ஆனால் இப்போது இவர்கள் காவடி எடுத்துள்ளனர். ஜனாதிபதி அழைத்தும் போகாத இவர்கள் அதனை கிடப்பில் போட்டுவிட்டு பின்னர் ஈஸ்ரர் தாக்குதல், குறுந்தூர் மலை விவகாரம், வெடுக்குநாறி ஆலய விவகாரம் என அவ்வப்போது ஏற்படும் பிரச்சினைகளைக் காரணம் காட்டி அடிப்படை பிரச்சினையைத் தீர்க்க முன்வராதிருந்தனர். இதனிடையே ஐ.நா. மனித உரிமை பேரவையும் 13 ஆவது வரை வைத்தான் நடைமுறைப் படுத்துமாறு கோருகின்றது. இப்போது இவர்கள் புதுடெல்லிக்கு சென்று இந்திய இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோருவது இதயசுத்தியுடன் உண்மையானதாக இருக்குமாயின் அதனை முதலில் நாமே வரவேற்போம்.

13 ஆவது திருத்தச் சட்டமானது இலங்கையின் அரசியல் யாப்பில் உள்வாங்கப்பட்ட விடயம் என்பதால் இதை நடைமுறைப்படுத்தவதில் தடை ஏதும் இருக்கப்போவதில்லை. ஆனால் புதிதாக ஏதாவதொன்று வருமாயின் அது கடும் வாதப்பிரதிவாதங்கள் மற்றும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை என பல பிரச்சினைகளை எதிர்கொண்டு காலதாமதமாக வாய்ப்பிருக்கின்றது.

எனவே நாம் நீண்டகாலமாக வலியுறுத்திவரும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் எந்தத் தடையும் இருக்கப்போவதில்லை. - என்றார். (05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Roty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# முதன்முறையாக விசேட தேவையுடைய 200 சிறுவர்கள் நாடாளுமன்றம் வருகை



2023 டிசெம்பர் 03 ஆம் திகதியன்றுகொண்டாடப்படும் சர்வதேச விசேட தேவையுடைய நபர்களின் தினத்தை முன்னிட்டு, விசேட தேவையுடைய நபர்களுக்கான நாடாளுமன்ற ஒன்றியத்தின் அழைப்பின் பேரில் பல பாடசாலைகளை பிரதிநிதித்துவப்படுத்தி சுமார் 200 விசேட தேவையுடைய சிறுவர்கள் திங்கட்கிழமை நாடாளுமன்றத்துக்கு வருகை தந்தனர்.

இந்த சிறுவர்கள் நாடாளுமன்றத்தின் பொதுமக்கள் கலரிக்கு வந்ததை அடுத்து சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்களை வரவேற்று விசேட வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

விசேட தேவையுடைய சிறுவர்கள் சுமார் 200 பேர் நாடளுமன்றத்துக்கு வருகை தந்துள்ளமை வரலாற்றில் முதன்முறையாக நடந்த தனிச்சிறப்பு வாய்ந்த நிகழ்வாகும் என்பதை நினைவுபடுத்திய சபாநாயகர் இந்த சிறுவர்கள் உட்பட இலங்கையிலுள்ள அனைத்து விசேட தேவையுடைய சிறுவர்களின் எதிர்கால வாழ்க்கை அனைத்து வகையிலும் வெற்றியடைய வேண்டும் என வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

அதனையடுத்து, இந்த சிறுவர்களுக்கு விசேட தேவையுடைய நபர்களுக்கான நாடாளுமன்ற ஒன்றியத்தின் தலைவர் நாடளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும, சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான கலாநிதி சுசில் பிரேமஜயந்த, நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் நாடாளுமன்றஉறுப்பினர் வைத்தியகலாநிதி சுதர்ஷினி பர்னாந்துபுல்லே ஆகியோரைகலந்துக்கொண்டனர்.

இதன்போது, கருத்துத் தெரிவித்த நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் குறிப்பிடுகையில் -

விசேட தேவையுடைய நபர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டமூலத்தின் பணிகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன எனத் தெரிவித்தார்.

அதற்கமைய, அதனை விரைவுபடுத்துவதற்கு ஆதரவளிப்பது அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்பாகும் என நீதி அமைச்சர் நினைவுபடுத்தினார். மேலும், விசேட தேவையுடைய சிறுவர்களுக்கான உள்வாங்கப்பட்ட கல்வியை வழங்குவதற்கான சவாலை புதிய கல்விச் சீர்திருத்தங்கள் மூலம் வெற்றிகொள்ள முடியும் என கல்வி அமைச்சர் இதன்போது தெரிவித்தார். இதன் மூலம் விசேடதேவையுடையசிறுவர்கள் சாதாரண சிறுவர்களுடன் சேர்ந்து கல்வி கற்கும் வாய்ப்பு ஏற்படும் என கல்வி அமைச்சர் நினைவுபடுத்தினார்.

சிறுவயதிலேயே குழந்தைகளிடம் தோன்றும் குறைபாடுகளைக் கண்டறிந்து அந்தக் குழந்தைகளுக்கு தேவையான சிகிச்சைகளை வழங்க பிரத்தியேக இடத்தை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிடுகையில், அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுடன் விசேடதேவையுடையநபர்களின் உரிமைகளையும் சேர்த்து அரசமைப்புதிருத்தப்படவேண்டும் எனக் குறிப்பிட்டார். அத்துடன் இயலாமையுடைய சமூகத்தினருக்கு வரி விதிப்பதைத் தவிர்க்கும் வகையில் வரிக் கொள்கை திருத்தப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தொடர்பாடல் திணைக்களத்தின் பொதுமக்கள் சேவைப் பிரிவால் இந்த சிறுவர்களுக்குத் தேவையான வசதிகள் மற்றும் நாடாளுமன்ற முறைமை தொடர்பான விழிப்புணர்வும் வழங்கப்பட்டது. இந்தநிகழ்வுவிசேடதேவையுடைய நபர்களுக்கான சங்கங்களின் ஒன்றிணைந்த முன்னணியின் தலைவர் ரசாஞ்சலி பத்திரகேவின் ஒருங்கிணைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அதற்கான வசதிகளை தேசிய ஜனநாயக நிறுவனம் செய்திருந்தது. இந்த சந்தர்ப்பத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள்உள்ளிட்டதரப்பினர் கலந்துகொண்டனர். (05)

# ஊவாவில் தமிழ் மொழி அமுலாக்கம் ஆளுநர்களின் நடத்தையால் பாதிப்பு

## வடிவேல் சுரேஷ் காட்டம்

ஊவா மாகாணத்தில் தமிழ்மொழி அமுலாக்கம்அங்குநியமிக்கப்படுகின்ற ஆளுநர்களின் நடத்தை காரணமாக இல்லாமலாக்கப்பட்டு வருகின்றது. மலையகம் தொடர்பான போதுமான அறிவு இல்லாமையே இதற்குக் காரணமாகும் என எதிர்க்கட்சி உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் கல்வி அமைசுக்கான ஒதுக்கீட்டுசட்டமூலம்மீதானகுழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக் கையில் -

மலையகத்தின் சில பாடசாலைகளுக்கு இலவசக்கல்வியை பெற்றுக் கொள்வதுதடையாகஇருந்துவருகிறது. பதுளை மாவட்டத்தில் ராபேரி கிராமத்தில்இருக்கும்மாணவர்களுக்கு போக்குவரத்து இல்லை.

அவர்கள் காலை 4 மணிக்கு பந்தங்களைஏந்திக்கொண்டு 15 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும் மடுல்சீமா பஸ் நிலையத்துக்கு செல்ல வேண்டிய துர்ப்பாகிய நிலை இருந்து வருகிறது. ஆனால் அந்த மாணவர்களின் கல்வி பொதுத் தராதர உயர்தர மற்றும் சாதாரண தர பெறுபெறுகள் மிகவும் சிறந்து விளங்குகின்றன. அத்துடன் மலையகத்தில் பாடசாலைகளில் கட்டடங்கள்அமைக்கப்பட்டுள்ளபோதும் அந்தப் பாடசாலைகளுக்குத் தேவையான ஆசிரியர்கள் இணைத் துக் கொள்ளப்படவில்லை.

பதுளை மாவட்டத்தில் பசறை தொகுதியில் தமிழ் மொழி மூல 3 தேசியபாடசாலைகளே இருக்கின்றன. இவைகளில் வளங்கள் இருந்தாலும் போதிய ஆசியர்கள் இல்லை. குறிப்பாக கல்விப் பொதுத் தராதர உயர்தர மற்றும் சாதாரண தர பாடங்களுக்கு கணித,விஞ்ஞான பாடங்களுக்கு ஆசிரியர் இல்லை. அதனால் மலையகப் பாடசாலைகளுக்கும் கல்வி பொதுத் தராதர உயர்தர மற்றும் சாதாரண தர பாடங்களுக்கு தேவையானஆசிரியர்களைநியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் ஊவா மாகாணத்தில் தமிழ்மொழிஅமுலாக்கம் ஏற்கனவே இருந்து வந்தது. ஆனால் மாறி மாறி வந்த ஆளுநர்கள், மலையகத்தின் கல்வி, சுகாதாரம்எனஅனைத்தையும் மட்டம் தட்டி இருக்கிறார்கள்.

நியமிக்கப்படும் ஆளுநர்கள் வெளிப்பிரதேசத்தை சேர்ந்தவர்கள். அதனால் அவர்களுக்கு மலையகம் தொடர்பாகபோதுமானஅறிவுஇல்லை.

ஊவா மாகாணத்தில் 202 தமிழ் முஸ்லிம்பாடசாலைகள்இருக்கின்றன. இந்தப் பாடசாலைகளில் தமிழ் மொழிஅமுலாக்கம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.தமிழ்கல்விபணிப்பாளர்கள் ஓய்வு பெற்றுச் சென்றால் அந்த இடத்துக்கு தமிழ் மொழி மூலமான பணிப்பாளர் நியமிக்கப்படாமல் வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஊவா மாகாணத்தில் தமிழ் மொழி அமுலாக்கம் அங்கு நியமிக்கப்படுகின்ற ஆளுநர்களின் நடத்தை காரணமாக இல்லாமலாக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மலையக பிரதேசங்களில் பின்தங்கி இருக்கும் கல்வி அபிவிருத்தியை முன்னேற்றுவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது. அதனை அவர் செய்ய வேண்டும்எனகேட்டுக்கொள்கிறேன். - என்றார். (05)


முல்லை ஒய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உ ங்களின் ஒய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்



4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

## 21 வயதில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பில்லியன் ரூபா நிதியுடன் மொத்தமாக 517 பில்லியன் ரூபா இம்முறை வரவு செலவுத்திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்றுஇ விசேட தேவையுடைய பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அவர்களையும்சாதாரணபிள்ளைகள் கல்வி கற்கும் வகுப்பறைகளில் இணைத்துக்கொள்ளக் கூடிய வகையில் இன்குளூஸிவ் கல்வி (ஐஉடரளைஎந நனரஉயவழைெ) முறையை அறிமுகப்படுத்தவுள்ளோம்.

பல்வேறு அபிவிருத்தி அடைந்த நாடுகளின் தேசிய வருமானத்தின் பெரும்பகுதியை பிரதிநிதித்துவப்படுத்துவது ஸ்டெம் (ளுவுநுஆ) கல்வியின் மூலம் கட்டமைக்கப்பட்ட மனிதவளமாகும். அதேபோன்று இந்நாட்டின் பாடசாலைக் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த விஞ்ஞானம், தொழில்நுட்பம் பொறியியல், கலை, கணிதம் ஆகிய துறைகள் மூலம் பிள்ளைகளுக்கு முறையான வழிகாட்டல் வழங்கப்பட வேண்டியுள்ளதோடுஇ அவற்றை முன்னுரிமைப்படுத்தும் செயற்பாடுகளுக்குஅவசியமானநடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின்ஒத்துழைப்புடன் முழுமையான கல்விக் கட்டமைப்பையும் டிஜிட்டல் மயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும். 1--5 % 6--9% 10--13 ஆம் தரங்களுக்கு புதிய கல்வி மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்தும் முன்னோடி வேலைத்திட்டம் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும்.

மாணவர்கள் 21 வயதுக்கு முன்னர்பல்கலைக்கழகத்தைவிட்டு வெளியேறும்வகையில்பாடசாலைப் பரீட்சைகள் நடத்தப்படும் தரங்களை மீள்திருத்தம் செய்யவுள்ளதுடன்இ 10 ஆம் தரத்தில் சாதாரண தரப் பரீட்சை மற்றும் 12 ஆம் தரத்தில் உயர்தரப் பரீட்சையை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும்இ எதிர்வரும்வருடத்தில்பெருந்தோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்திக்காக 2,535 ஆசிரியர்களை இணைத்துக் கொள்ளவுள்ளதுடன்அவர்களுக்கான பயிற்சிகளைவழங்கவும்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்றுஇ 3 முதல் 5 வரையான வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைப் பருவ வளர்ச்சிக்கான சிறப்பு வேலைத்திட்டமொன்றை கல்வி அமைச்சுஇ தேசிய கல்வி நிறுவனம் மற்றும் யுனிசெப் ஆகியவற்றுடன் இணைந்து செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஆசிரியர் கல்வியியலாளர் சேவைஇ ஆசிரியர் ஆலோசகர் சேவை மற்றும் ஆசிரியர் வெற்றிடங்கள் உட்பட கல்வி சேவையில் நிலவும் அனைத்து வெற்றிடங்களையும் அடுத்த வருடம் பாடசாலைகளை ஆரம்பிக்க முன்னர் நிரப்புவதற்கு அவசியமான பணிகளை முன்னெடுத்துள்ளோம் என்றார்.

## நாணய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டுகருத்துதெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த கூட்டத்தை எதிர்வரும் 12ஆம் திகதி நடத்தினால் நாடு இரண்டாவது கடன் தவணையை 12ஆம் திகதியே பெற்றுக்கொள்ளும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான்சேமசிங்கதெரிவித்ததார்.

இரண்டாம் தவணை நாட்டிற்கு கிடைக்காது. கடன் மறுசீரமைப்புக்கு நாடுகள் இணங்காது என்றும் கடந்த 2 மாதங்களில் கருத்து வெளியிட்டிருந்ததை நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளார். இரண்டாவது தவணை நிச்சயம் இலங்கைக்கு கிடைக்கும்; எனவும் மேற்படி கருத்து முற்றாக அழிக்கப்படும் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# இலவசக் கல்வியை வலுப்படுத்தும் அதேவேளை மாற்றுக் கல்வி வாய்ப்புகளும் உருவாகவேண்டும்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



எமது நாட்டின் கல்விப் பரப்பில் புதிய மாற்றங்களை உள்வாங்கி கல்வியின் புதிய யுகத்திற்குள் நுழைய வேண்டும் என்றும், 50 களில் இருந்து சிங்களம் மட்டும் சிங்களம் மட்டும் என்று கூறும் பொறிமுறைக்குள் இருந்து கொண்டு ஒரு நாடாக முன்னேற முடியாது என்றும், நாமாகவே சுவர்களைக் கட்டிக்கொண்டு, எல்லைகளை வகுத்து, சுருங்கியமனப்பாங்குடன் செயற்படும் போக்கில் ஒரு நாடாக உண்மையான சுபீட்சத்தை எட்ட முடியாது என்பதால், சிங்களம் உள்ளடங்களாக பிற மொழிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படுவதுபோலவேஆங்கில மொழிக்கல்விக்கும்முன்னுரிமை வழங்க வேண்டிய தருணம் வந்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் ஒதுக்கீட்டு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே எதிர்க் கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில் -

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு முன்னரும்பின்னரும் வெளியேறும் மாணவர்கள் தொழிற்பயிற்சி கல்வியை நாடினாலும், தற்போது, அதன் தரம் குறைந்துள்ளதாகவும்,உயர்கல்வி வாய்ப்புகளை வலுப்படுத்த வேண்டும் என்றும், உயர் கல்விக்கான வாய்ப்புகளை இழந்தோர்களுக்கான வாய்ப்புகளையும் விரிவுபடுத்த வேண்டும் என்றும், பல்கலைக்கழக வாய்ப்பைப் பெறாத மாணவர்களுக்கும் உயர்கல்விக்கான உரிமை வழங்கப்பட வேண்டும்.

தனியார் கல்வியை எதிர்க்கும் பெரும்பான்மையின ரின் பிள்ளைகள் தனியார் பல்கலைக்கழகங்களிலும் நிறுவனங்களிலும் கல்வி கற்கிறார்கள் என்றும், தனது சொந்த பிள்ளைகளுக்கு வழங்கும் அதே விருப்பத்தை நாட்டு பிள்ளைகளுக்கும் ஏன் நாட்டிலுள்ள ஏனைய பிள்ளைகளுக்கும் அந்த முறைமை பொருத்தமற்றது என்று கேள்வி எழுப்பிய அவர், டிஜக்கிய மக்கள் சக்தியின் கொள்கையின் ஊடாக நாட்டின் இலவச கல்வியை பலப்படுத்தி, முற்போக்கான மற்றும் நவீனமயமாக்கல் செயற்பாடுகளை முன்னெடுத்து, கல்வி வாய்ப்புகளையும் கல்விசார் தெரிவுகளையும் வழங்குவதற்கு செயற்படுவோம் எனவும் தெரிவித்தார். (05)

# எதிர்காலச் சந்ததியைச் சீர்குலைக்கும் மதுச்சாலையை அனுமதிக்கமுடியாது

## ஹரீஸ் எம்.பி. தெரிவிப்பு

பொத்துவில் நகரில் மதுபான விற்பனை நிலையம் திறக்கப்படுவதை தான் வன்மையாக எதிர்ப்பதாகவும், குறித்த மதுபானசாலை அமையவுள்ள இடத்திலிந்து 200 மீற்றருக்குட்பட்ட பிரதேசத்தில் பொத்துவில் தமிழ் மகா வித்தியாலயம் அமைந்துள்ளதாகவும் அதேபோன்று 200 மீற்றருக்குட்பட்ட இடைவெளியில் பௌத்த விகாரை, கோயில், தேவாலயம், பொத்துவில் ஜும்மா பள்ளிவாசல், வைத்தியசாலை, நீதிமன்றம், பொலிஸ் நிலையம், பாலர் பாடசாலை என்பன அமைந்துள்ளன எனவும் சுட்டிக்காட்டிய திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், எதிர்கால சந்ததியை பழுதாக்கும் இந்த மதுபானசாலையை அனுமதிக்கமுடியாது என்று தனது பக்க விளக்கமளிப்பில் சுட்டிக்காட்டியிருந்தார்.

பொத்துவில் நகரில் மதுபானசாலை அமைப்பது சம்பந்தமாக கோரப்பட்ட அனுமதியை ரத்து செய்யுமாறு கோரி திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பிலான விசாரணை பொத்துவில் பிரதேச செயலகத்தில் ஹலால், மதுவரித்திணைக்கள உதவி ஆணையாளர், திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலாளர், பிரதேச செயலக அதிகாரிகள் முன்னிலையில் இடம்பெற்றது.

இந்த சாட்சியமளிக்கும் நிகழ்வில் மேலும் கருத்து வெளியிட்ட அவர் -

பொத்துவில் பிரதேசம் சுற்றுலாத் துறைக்கு பேர் போன இடமென்பதால் அருகம்பே பிரதேசத்தில் ஐந்துக்கு மேற்பட்ட மதுபானசாலைகள் இயங்கிக்கொண்டிருப்பதால் இந்த மது பானசாலைக்கு உரிமம் வழங்குவது அவசியமற்றது என்பதால் பொத்துவில் பிரதேச சிவில் அமைப்புக்களும், பொதுமக்களும் என்னிடம் இந்த அனுமதி வழங்களை ரத்து செய்து தருமாறு கேட்டுக்கொண்டிருப்பதால் அவர்களின் பிரதிநியாக இருக்கும் நான் இந்த அனுமதியை எக்காரணம் கொண்டும் வழங்கக் கூடாது என்பதிலும், உரிமம் வழங்குவதனூடாக எதிர்காலத்தில் வரவிருக்கும் சமூக சீர்கேட்டை எக்காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாதென்பதிலும் உறுதியாக இருப்பதாகத் தனது சாட்சியத்தில் விளக்கியிருந்தார். சுகவீனம் காரணமாக நேரடி யாக சமுகமளிக்க முடியாத சூழ் நிலையில் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் நிகழ்நிலை ஸூம் தொழிநுட்பத்தினூடாக தோன்றி இங்கு விளக்கமளித்தார்.

இந்த சாட்சியமளிக்கும் நிகழ்வில் மதகுருமார்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி, நிதி இராஜாங்க அமைச்சர் மற்றும் அரச உயர்மட்டங்களின் கவனத்திற்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் கொண்டு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# டெங்கு விழிப்புணர்வு கருத்தமர்வு லயன்ஸ்கழக ஏற்பாட்டில் நடந்தது








சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 பி1 இன் மாவட்ட ஆளுநர் லயன் பிளஸிடஸ் எம் பீற்றர் அவர்களால் டிசெம்;பர் மாதம் 4 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையான காலப்பகுதி டெங்கு விழிப்புணர்வுவாரமாகபிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் அதன் மூன்றாம் நாளான நேற்று (புதன்கிழமை) உடுவில் கல்லூரி மாணவர்களுக்கு டெங்குநோயிலிருந்து எம்மை எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது. இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அஜந்தன் நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் மாவட்ட ஆளுநரின் ஆலோசகரும் சுன்னாகம் லயன்ஸ் கழக செயலாளருமான லயன் சி.ஹரிகரன், சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர்களான - பிராந்தியத் தலைவர் லயன் பா.மரியதாஸ், வலயத் தலைவர் லயன் க.டினேஸ், மாவட்டத் தலைவர் லயன் தே.அகிலன் ஆகியோர் கலந்துகொண்டனர். கடந்த திங்கட்கிழமை சுன்னாகம் மயிலணி மகாவித்தியாலயத்திலும், செவ்வாய்க்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் இந்த நிகழ்வு நடைபெற்றது. இன்று(வியாழக்கிழமை) இராமநாதன் கல்லூரியில் நடத்தவும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. (05)

# சட்டவிரோதமான கல்வி நிறுவனம் பம்பலப்பிட்டியில் சுற்றி வளைப்பு

## பணிப்பாளரான யுவதி கைது

கொழும்பு பம்பலப்பிட்டியில் சட்டவிரோதமான முறையில் கல்வி நிறுவனமொன்றை சுற்றிவளைத்த பொலிஸார், அந்நிறுவனத்தின் பணிப்பாளர்எனக்கூறப்படும்யுவதிஒருவரைக் கைது செய்துள்ளனர்.

24 வயதுடைய சந்தேக நபர் கிரியுல்ல நாரங்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிறுவனம், நாடு முழுவதிலும் உள்ள மாணவர்களை உள்வாங்குவதற்கும், ஒன்லைன்கருத்தரங்குகளை நடத்துவதற்கும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு தேவையான டிப்ளோமாக்கள் மற்றும் உயர் டிப்ளோமாக்கள் போன்ற கல்வித் தகுதிகளை வழங்குவதற்காகவும் சமூக ஊடக தளங்களில் விளம்பரம் செய்துள்ளது.

எந்தவொரு சட்ட அங்கீகாரமும் இன்றி கல்விச் சேவைகளை வழங்கிய பின்னர், போலியான டிப்ளோமா சான்றிதழ்களையும் நிறுவனம் வழங்கியுள்ளது.

குறித்தநிறுவனம்உள்ளூர்அல்லது சர்வதேச தரத்தைப் பூர்த்தி செய்யாமல் இயங்கி வந்ததாகவும் அங்கு கல்வியைமேற்கொள்பவர்களிடமிருந்து பெருந்தொகைப் பணத்தை அறவிட்டுள்ளதாகவும்பொலிஸார்தெரிவித்தனர்.

இந்த நிறுவனம் தொடர்பாக இதுவரை பொலிஸாருக்கு 43 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

குறித்த நிறுவனம் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அனுமதியையும் பெறவில்லை என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த சுமார் 1,000 பேர் இந்த மோசடிக்கு பலியாகி இருப்பது தெரியவந்துள்ளது.

இதேவேளை, குறித்தநிறுவனத்தின் இணைப் பணிப்பாளராக செயற்பட்டு தற்போது தலைமறைவாகவுள்ள மட்டக்குளியைச் சேர்ந்த 25 வயதுடைய நபரைக் கைது செய்வதற்கான விசாரணைகளை பம்பலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பம்பலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# போதைப்பொருள் பாவனைக்கு எதிராக விசேட தேவையுடையோர் வீதி ஊர்வலம்





சர்வதேச விசேட தேவையுடையோர் தினம் டிசெம்பர் மூன்றாகும். இதனை முன்னிட்டு மருதமுனை ஹியூமன் லின்க் விசேட தேவையுடையோர் வளப்படுத்தல் மத்திய நிலையம் ஏற்பாடு செய்த போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு வீதி ஊர்வலம் மருதமுனையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மருதமுனைபிரதானவீதியின்பெரியநீலாவணை சந்தியில் ஆரம்பித்த இந்த விழிப்புணர்வு வீதி ஊர்வலம் பிரதான வீதி வழியாக வந்து மருதமுனை வைத்தியசாலை, ம்ஸ் மத்திய கல்லூரி பாடசாலை அமைந்திருக்கும் பிரதான வீதி வழியாக மீண்டும் வளப்படுத்தல் மத்திய நிலையத்தை வந்தடைந்தது.

'போதை ஆயுளை அழிக்கும்', 'ஒன்றிணைவோம் போதையை ஒழிக்க', 'எங்களை ஒதுக்காதீர்கள்', போன்ற சுலோகங்கள் மற்றும் சித்திரங்களை தாங்கியவாறு மாணவர்கள் ஊர்வலமாகச் சென்றனர். வீதி வழியாக சென்ற விசேட தேவையுடையோர் மாணவர்களுக்கு தனவந்தர்கள் தமது அன்பளிப்புக்களையும் வழங்கினார்கள்.

இதில் வளப்படுத்தல் மத்திய நிலையத்தின் பணிப்பாளர் ஏ.கமறுத்தின், பணிப்பாளர் சபை உறுப்பினர் எஸ்.எல்.அஜமல்கான் உட்பட வளப்படுத்தல் மத்திய நிலையத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், ஆசிரியர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், சமூக மட்டத்திலான ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர் . (05)

# 45 இடங்களில் டெங்கு குடம்பிகள் மட்டக்களப்பு நகரில் கண்டுபிடிப்பு





தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் டாக்டர் நளின் ஆரியரத்தின தலைமையிலான தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை மட் டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்தனர்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவில் உள்ள பொலிஸ் நிலையம், பொலிஸ் அத்தியாச்சகர் பணிமனை, சமுர்த்தி வங்கி,மட்டக்களப்பு மாநகர சபை,மட்டக்களப்பு மங்கள ராம விகாரை உட்பட அரச மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களில் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பணியக அதிகாரிகள் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதரர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் டெங்கு சுற்றி வளைப்பு தேடுதலின் போது 45 இடங்களில் டெங்கு குடம்பிகள் பரவும் இடங்கள் அடையாளம் காணப்பட்டன என மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தைச் சேர்ந்த திருமதி தர்ஷினி கணநாதன் தெரிவித்தார்.

மாவட்ட சிரேஷ்ட பொது சுகாதார பரிசோதகர் எஸ்.தசவீரசிங்கம் தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர்கள் குறித்த டெங்கு பரிசோதனை வேலை திட்டத்தில் இணைந்திருந்தனர்.

மேற்குறித்த இடங்களில் நடத்தப்பட்ட தேர்தல்களின் போது டெங்கு பரவும் இடங்களாக வைத்திருந்த இடங்கள் அடையாளம் காணப்பட்டன. டெங்கு குடம்பிகள் உற்பத்தியாகியிருந்த 45 இடங்கள் இவ்வாறு அடையாளம்காணப்பட்டனஎனமேற்பார்வை சுகாதார பரிசோதகர் எஸ்.தசவீரசிங்கம் தெரிவித்தார்.

டெங்கு பரவும் இடங்களாக சூழலை வைத்திருந்த அரச மற்றும் அரசு சார்பற்ற நிறுவன பொறுப்பாளர்களுக்கு விழிப்பூட்டல் நிகழ்வுகளும் நடத்தப்பட்டன.

(05)

## தனியார் பஸ் நடத்துநர் மீ து தாக்குதல்; மூன்று பேர் கைது

கரகம்பிட்டியிலிருந்து ஹெட்டியாவத்தைக்குச் செல்லும் தனியார் பஸ்ஸின் சாரதி ஒருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கி காயப்படுத்திய குற்றச்சாட்டில் மூவரை மிரிஹான பொலிஸார் கைது செய்துள்ளனர். திங்கட்கிழமை காலை ஐந்து மணியளவில் பஸ்ஸை சுத்தம் செய்து கொண்டிருந்த நடத்துநரை மோட் டார் சைக்கிளில் வந்த மூவர் தாக்கி காயப்படுத்தி விட்டு தப்பியோடியுள்ளனர்.

காயமடைந்தவர் நுகேகொட பிரதேசத்தைச் சேர்ந்த அசேல ஜோசப் என்ற 23 வயதுடைய-வர் என்பதுடன் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் மேற் கொண்ட விசாரணையின் போது கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். குறித்த விடயம் தொடர்பில் இவர்கள் பழிவாங்கும் நோக்கிலேயே இந்தத் தாக்குதல் நடத்தியுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. அத்துடன் தாக்குதலை நடத்திய நபர்கள் உயிரிழந்த இளைஞனின் உறவினர்கள் எனவும் இவர்கள் பழிவாங்கும் நோக்கிலேயே தாக்குதல் நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்கள் பயன்படுத்திய இரண்டு வாள்கள் மற்றும் கத்தி என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர்கள் நுகேகொட நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளதோடு மிரிஹான தலைமைப் பொலி-ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## ஆசிய திருமணமான அழகி பட்டம் வென்ற சஞ்சீவனி அம்புள்தெனிய நாடு திரும்பினார்

தாய்லாந்தின் பாங்கொக்கில் நடைபெற்ற 21 ஆவது ஆசிய திருமணமான அழகி போட்டியில் கலந்துகொண்டு எலிகன்ஸ் மேரிட் மிஸ் கிரவுன் ஒவ் ஏசியா பட்டத்தை வென்ற திருமதி சஞ்சீவனி அம்புள்தெனிய மகுடத்துடன் செவ்வாய்க்கிழமை கட்டுநாயக்கவிமானநிலையத்தை வந்தடைந்தார்.

சஞ்சீவனி அம்புள்தெனிய இந்த ஆண்டு 2023 இல் திருமணமானமிஸ்ஸ்ரீலங்காவாக தேர்ந்தெடுக்கப்பட்டார், இந் நிலையிலேயே அவர் ஆசிய திருமணமான அழகி போட்டிக்குப் பரிந்துரைக்கப்பட்டார்.

7 ஆசிய நாடுகளைச் சேர்ந்த திருமணமான அழகுராணிகள் பங்கேற்ற இந்தப் போட்டி தாய்லாந்தின் பாங்கொக்கில் நடைபெற்றது.

திருமதி சஞ்சீவனி அம்புள்தெனிய தாய்லாந்தின் பாங்கொக்கிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அவரை வரவேற்க அவரது தந்தை ஜயதிலக அம்புள்தெனிய மற்றும் அவரது தாயார் திருமதி மெனிகே அம்புள்தெனிய ஆகியோர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்துக்கு வருகை தந்திருந்தனர்.

(05)

## மார்ச் மாதத்துக்குள் மின்சார பஸ்கள்

லங்காஅசோக்லேலண்ட் நிறுவனம் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் மின்சார பஸ்களை உள்நாட்டில் பொருத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

ஆரம்பக்கட்டமாக பயணிகள் போக்குவரத்துக்கு 5 பஸ்கள் இணைக்கபடவுள்ளன என நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

இவ்வாறான பஸ்களுக்கு ஒருமுறை சார்ஜ் செய்தால் 300 கிலோமீற்றர் தூரம் செல்லக் கூடியதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

## ஹெலியில் நெடுந்தீவுக்கு வந்த சுற்றுலா பயணிகள்





உலங்கு வானூர்தியொன்றை வாடகைக்கு அமர்த்தி வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நெடுந்தீவுக்கு விஜயம் செய்து பார்வையிட்டு திரும்பியுள்ளனர்.

நெடுந்தீவில் உள்ள தனியார் சுற்றுலாத்துறை நிறுவனமொன்றின் ஏற்பாட்டிலேயே குறித்த சுற்றுலா பயணிகள் வருகை தந்தனர்.

நெடுந்தீவின் சுற்றுலாத்துறையின் இது முதன்மையாக ஒருசிறந்த முன்னேற்றபடிக்கல்லாக இவ் வருகை அமைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

(05)

# பல்கலை உருவாக்க அனுமதிக்கு முன் மாகாண சபைத் தேர்தலை நடத்துக

### ஜி.எல்.பீரிஸ் வலியுறுத்து



2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பல்கலைக்கழகங்களை உருவாக்கும் அதிகாரத்தை மாகாணசபைகளுக்கு வழங்கப்படுவதாக அரசாங்கம் முன்மொழிந்துள்ளது.

அப்படியானால் முதலில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டும். மாகாண சபைகளில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலையில் எவ்வாறு பல்கலைக்கழகங்களைஉருவாக்க முடியுமென எதிரணியின் சுயாதீன உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் கல்வி அமைச்சின் செலவுத்தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

புதிய பல்கலைக்கழகங்களையும் தனியார் பல்கலைக்கழகங்களையும் உருவாக்குவதாக ஜனாதிபதி முன்மொழிந்துள்ளார். அத்துடன்பல்கலைக்கழகங்களை உருவாக்கும்அதிகாரம்மாகாண சபைகளுக்கும் வழங்கப்படுவதாகவும் அரசு அறிவித்துள்ளது.

இதில்முதலாவதுபிரச்சினை, பல்கலைக்கழகங்களை உருவாக்கி அவற்றுக்கான ஆளணி மற்றும் பௌதீக வளங்களை வழங்கும் இயலுமை மாகாண சபைகளுள்ளதா என்பது அடுத்து பல்கலைக்கழகங்களை உருவாக்கும் அதிகாரம் மாகாண சபைகளுக்கும் வழங்கப்படும் என்றால் அந்த மாகாணசபைகளில் மக்கள் பிரதிநிதிகள் இருக்க வேண்டும்.

தற்போது நாட்டில் உள்ள மாகாண சபைகள் அனைத்தும் ஆளுநர்களின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

அங்கு மக்கள் பிரதிநிதிகள் எவரும் இல்லை. இவ்வாறான நிலையில் மாகாணசபைகளால் எப்படி பல்கலைக்கழகங்களை உருவாக்க முடியும்? அவ்வாறு மாகாண சபைகளைக் கொண்டு பல்கலைக் கழகங்களை அரசு உருவாக்க விரும்பினால் முதலில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டும்.

இதேவேளை இன்று மூளைசாலிகள் வெளியேற்றம் என்பது பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது நாட்டிலிருந்து வெளியேறியுள்ள மூளைசாலிகளின் வெற்றிடத்தை நிரப்ப எமக்கு இன்னும் இரண்டு பரம்பரை தேவைப்படும். முன்னர் பல்கலைக்கழக கலாநிதிகள், பேராசிரியர்களுக்கு சம்பளம்குறைவாகஇருந்தாலும் அவர்கள் 7,8 மடங்கு சம்பள அதிகரிப்பை எதிர்பார்த்து நாட்டிலிருந்து வெளியேற முற்படவில்லை.

ஏனெனில் பணியில் அவர்களுக்கு திருப்தி இருந்தது. ஆனால் தற்போது நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடியில் அவர்களுக்கு சம்பளம் போதாது. அத்துடன் பாரிய வரி விதிப்புக்களினாலும் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

அது மட்டுமன்றி அவர்கள் தமது பணியில் திருப்தியடைய முடியாதவாறு பல்கலைக்கழகங்களில் பெரும் வளப்பற்றாக்குறைகளும் உள்ளன.

எனவே பல்கலைக்கழகங்களிலுள்ள ஆளணி மற்றும் பௌதீக வளப்பற்றாக்குறைகளைக் கண்காணித்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதும ானியங்கள் ஆணைக்குழுவின் கடமை. - என்றார். (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர்
Kalaikkathir

# தடைகள் மூலம் இலங்கைக்கு எதிராக அதிக அழுத்தங்கள் கொடுக்கவேண்டும்

## பிரிட்டிஷ் தொழில்கட்சி எம்.பி. வலியுறுத்து



இலங்கையில் தமிழர் பகுதிகளில் இராணுவமயமாக்கல் தொடர்வதை சுட்டிக்காட்டியுள்ள பிரிட்டனின் தொழில்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் மக்டொனல் இது பிரிட்டனினதும் சர்வதேச சமூகத்தினதும் கூட்டு தோல்வி எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக தடைகளை விதித்தமைக்காக அமெரிக்கா கனடாவை பாராட்டுவதாகத் தெரிவித்துள்ள அவர் தடைகள் வர்த்தக வரிகள் மூலம் அதிகூடிய அழுத்தங்களை கொடுக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எனது தொகுதியை சேர்ந்த ஒருவர் தனது குடும்பத்தை பற்றி அறிய இலங்கைக்கு சென்றார் அதன் பின்னர் அவர் காணாமல்போய்விட்டார் எனவும் தெரிவித்துள்ளார். (05)

# சகல பாடசாலைகளிலும் ஆங்கில கல்வியை விருத்திசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

நாட்டில் இருக்கும் அனைத்து பாடசாலைகளிலும் ஆங்கில கல்வியை அபிவிருத்தி செய்ய நடவடிக்கைஎடுக்கப்படவேண்டும். அதேபோன்று தொழி நுட்ப கல்வியை முதலாம் தரத்தில் இருந்து கட்டயமாக்க வேண்டும் என்பதுடன் அதனை ஆங்கில மொழிலேயே மேற்கொள்ள வேண்டும். அதன் மூலமே எதிர்காலசவால்களைவெற்றிகொள்ள முடியுமாகும். அத்துடன் மனப்பாடமிடும் கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் கல்வி அமைசுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

எமது நாட்டின் கல்விப் பரப்பில் புதிய மாற்றங்களை உள்வாங்கி கல்வியின் புதிய யுகத்திற்குள் நுழைய வேண்டும். 50 களில் இருந்து சிங்களம் மட்டும் என்று கூறும் பொறிமுறைக்குள் இருந்து கொண்டு ஒரு நாடாக முன்னேற முடியாது. நாமாகவே சுவர்களைக் கட்டிக்கொண்டு, எல்லைகளை வகுத்து, சுருங்கிய மனப்பாங்குடன் செயல்படும் போக்கில் ஒரு நாடாக உண்மையான சுபீட்சத்தை எட்ட முடியாது என்பதால், சிங்கள மொழி உள்ளடங்கலாக பிற மொழிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படுவது போலவே ஆங்கில மொழிக் கல்விக்கும் முன்னுரிமை வழங்க வேண்டிய தருணம் வந்துள்ளது.

அதற்காக நாட்டில் இருக்கும் 10126 பாடசாலைகளிலும் ஆங்கில கல்வியை அபிவிருத்தி செய்யவேண்டும். அதேபோன்று தற்போது பாடசாலைகளில் 6 ஆம் தரத்தில் இருந்து 13 ஆம் தரம் வரை கற்பிக்கப்படும் தொழிநுட்பக் கல்வியை முதலாம் தரத்தில் இருந்து 13 ஆம் தரம் வரைக்கும் விருத்தி செய்ய வேண்டும். அத்துடன் தொழிவ்நுட்பகல்வியைத் தாய்மொழியில் அல்லாமல் ஆங்கில மொழியிலேயே கற்பிக்க வேண்டும். அதன் மூலமே அதன் உண்மையான கல்வியைப் பெற்றுக்கொள்ள முடியும். அதேநேரம் நாட்டில் இருக்கும் அனைத்து பாடசாலைகளையும் ஸ்மாட் வசதி உள்ள பாடசாலைகளாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். ஸ்மாட் கல்வி மூலமே ஸ்மாட் நாட்டை ஏற்படுத்த முடியும்.

மேலும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு முன்னரும் பின்னரும் கல்வியில் இருந்து வெளியேறும் மாணவர்கள் தொழிற்பயிற்சி கல்வியை நாடினாலும், தற்போது, அதன் தரம் குறைந்துள்ளது.

உயர்கல்வி வாய்ப்புகளை வலுப்படுத்த வேண்டும். உயர் கல்விக்கான வாய்ப்புகளை இழந்தோர்களுக்கான வாய்ப்புகளையும் விரிவுபடுத்த வேண்டும் நாட்டில் 70 வீதமானவர்களுக்கு பல்கலைக்கழக வாய்ப்பு கிடைப்பதில்லை. அவர்களுக்கும் உயர்கல்விக்கான உரிமை வழங்கப்பட வேண்டும். தனியார் பல்கலைக்கழகங்களை எதிர்க்கும் பெரும்பான்மையானவர்களின் பிள்ளைகள் தனியார் பல்கலைக்கழகங்களிலும் நிறுவனங்களிலும் கல்வி கற்கிறார்கள்.

தனது சொந்தப் பிள்ளைகளுக்கு வழங்கும் அதே விருப்பத்தை நாட்டின் ஏனைய பிள்ளைகளுக்கு அந்த முறைமை பொருத்தமற்றது என்று வீதிக்கிறங்குகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கையின் ஊடாக நாட்டின் இலவச கல்வியை பலப்படுத்தி, முற்போக்கான மற்றும் நவீனமயமாக்கல் செயற்பாடுகளை முன்னெடுத்து, கல்வி வாய்ப்புகளையும் கல்விசார் தெரிவுகளையும் வழங்குவதற்கு செயற்படுவோம்.

அத்துடன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாக அரசாங்கம் மீண்டுமொரு முறை சிந்திக்க வேண்டும். மனப்பாட கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். தரம் 5, கல்வி பொதுத் தராதர சாதாரண மற்றும் உயர் தர பரீட்சைகளின் சில பாடங்கள் மனப்பாடம் செய்து விடை எழுத வேண்டி இருக்கிறது.

அதேபோன்று பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவதற்கு நாங்கள் ஆதரவு. ஆனால் மாணவர்கள் அதிகரிக்கப்படுவதுபோல் மனித வள மற்றும் பௌதிக வளங்கள் அந்த பல்கலைக்கழகங்களுக்கு வழங்க வேண்டும். இன்று அது முறையாக இடம்பெறாததால் பேராதனை மற்றும் கொழும்பு பல்கலைக்கழங்களின் தரம் குறைந்துள்ளது. உலக பல்கலைக்கழகங்கள் 500 இல் இந்த பல்கலைக்கழகங்கள் இருந்துவந்தன. ஆனால் தற்போது அது இல்லை.

பல்கலைக்கழகங்களில் இருந்த பேராசிரியர்கள் நாட்டை விட்டுசென்றுள்ளனர். சிலர் விடுமுறை பெற்று வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர். இதன் காரணமாகப் பல்கலைக்கழங்களில் கற்பிப்பதற்கு போதுமான பேராசிரியர்கள் இல்லை. பேரோசிரியர்களின் இந்த பிரச்சினைக்கு தீர்வுகாண அவர்களின் வரி அதிகரிப்பை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேநேரம் மொத்த தேசிய உட்பத்தியில் கல்விக்கு 4,5 வீதம் ஆவது ஒதுக்க வேண்டும். அதன் மூலமே நாட்டில் கல்வித்துறையை முன்னேற்ற முடியும். - என்றார். (05)

# ரயில் நிலைய கூரையிலிருந்து வீழ்ந்து நபரொருவர் காயம்

## மருதானையில் துயரம்

கொழும்பு - மருதானை ரயில் நிலையத்தில் 5 மற்றும் 6 ஆம் ரயில் மேடைகள் அமைந்துள்ள கட்டட கூரையின் மீது நடந்து கொண்டிருந்த நபர் ஒருவர் கீழே வீழ்ந்து காயமடைந்துள்ளார்.

இந்தச்சம்பவம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

உயிரிழந்த நபரை கீழே இறங்குமாறு பொலிஸார் மற்றும் ரயில் நிலைய அதிகாரிகள் பலமுறை எச்சரித்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இவர் ரயில் மேடைகளின் கட்டட கூரையின் மீது நடந்து கொண்டிருந்த போது கூரை ஒன்று உடைந்ததில் கீழே வீழ்ந்துள்ளார்.

இவரது தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ள நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# தீர்வின்றேல் தொடர்ந்தும் தொழிற்சங்க நடவடிக்கை

## ஜோசப் ஸ்ராலின் கிடுகுப்பிடி



சம்பளம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு கிடைக்காவிட்டால் தொடர்ந்தும் தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுக்கப்போவதாக இலங்கை ஆசிரியர்சங்கத்தின்பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்திற்கு முன்பாக உள்ள பத்தரமுல்ல - பொல்துவ சந்தியில் ஆசிரியர் சங்கங்களால் பாரிய போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

120 நாள்கள் போராட்டத்தில் நாங்கள் முன்வைத்த 3 கோரிக்கைகளில் ஒரு கோரிக்கை மட்டுமே நிறைவேற்றப்பட்டது.

இந்த வருடம் பணம் இல்லை அடுத்த வருடம் பார்ப்போம் என்று கல்வி அமைச்சர் கூறுகின்றார்.

அடுத்த வருடம் நீங்கள் இருக்கப்போவதில்லை. உங்களை நாங்கள் வீட்டுக்கு அனுப்புவோம்.

கல்வித்துறை வீழ்ச்சியடைந்துள்ளது. ஆகவே இந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேலதிக நிதித்தொகையை கல்வித் துறைக்காக ஒதுக்க வேண்டும்.

இதன்மூலம் அதிபர், ஆசிரியர் சம்பளபிரச்சினைதீர்க்கப்படவேண்டும்.

அவ்வாறுதீர்வுவழங்கப்படாவிட்டால் நாங்கள் தொடர்ந்தும் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்போம். - என அவர் மேலும் குறிப்பிட்டார். (05)

# தேசிய டிஜிற்றல் பிறப்புச் சான்றிதழ் வெளியீடு செவ்வாயன்று நடந்தது

நாட்டில் முதல் தேசிய டிஜிட்டல் பிறப்புச்சான்றிதழ் வெளியிடும் நிகழ்வு உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தலைமையில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இலத்திரனியல் மக்கள் தொகை பதிவேடு வேலைத்திட்டத்தின் கீழ் தேசிய டிஜிற்றல் பிறப்புச் சான்றிதழ் வெளியிடும் நிகழ்வு உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தலைமையில் இடம்பெற்றது.

களுத்துறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த தேசிய டிஜிற்றல் பிறப்பு சான்றிதழ் வேலைத் திட்டம் ஏனைய மாவட்டங்களுக்கும் துரிதமாக விரிவுபடுத்தப்படும் என உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

டிஜிற்றல் தொழில்நுட்பத்துடன் சர்வதேச தரத்திற்கமைய இந்த தேசிய பிறப்புச் சான்றிதழுக்கு வழங்கப்படும் இலக்கம் தேசிய அடையாள அட்டை இலக்கங்களாக மாற்றப்படும் என இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு குழந்தை பிறக்கும்போதே அடையாள எண்ணைக் கொடுப்பதன் மூலம் மக்கள் தொகைப் பதிவேட்டை உருவாக்குவதற்கு இலகுவாக அமையும்.

இந்த புதிய தேசிய பிறப்புச் சான்றிதழில் பிறந்த இடம் பற்றிய தகவல்கள், உரித்துடையவரின் இலக்கம், முழுப் பெயர், தந்தையின் தேசிய அடையாள இலக்கம், தாயின் தேசிய அடையாள இலக்கம், வழங்கப்படும் சான்றிதழின் சிறப்பு அம்சங்கள், பதிவாளர் நாயகரின் கையொப்பம், சான்றிதழ் உரித்துடையவரின் இனம், பெற்றோரின் திருமணமான மற்றும் திருமணமாகாத நிலையை விலக்குதல்.

இந்த பிறப்புச் சான்றிதழை சிங்களம், ஆங்கிலம் அல்லது தமிழ், மொழிகளில் வழங்குதல்.

சான்றிதழில் உள்ள தகவல்கள் திருத்தப்பட்டால், சரியான தகவல்களை மட்டும் கொண்ட புதிய சான்றிதழ் வழங்குதல் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (05)

# கொழும்பு பிரதேசத்தில் கைக்குண்டு ஒன்றுமீட்பு

நேற்று (புதன்கிழமை) காலை தெஹிவளை பகுதியில் உள்ள கட்டடம் ஒன்றில் கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தெஹிவளை பொலிஸ் டொமைன் இலக்கம் 124, அனகாரிக தர்மபால மாவத்தை, தெஹிவளை என்ற முகவரியில், பாதி கட்டப்பட்டு கைவிடப்பட்டுள்ள 11 மாடி கட்டடத்தின் 5 ஆவது மாடியில் இந்தக் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீல நிற பொலித்தீன் பையில் பொதி செய்யப்பட்ட கைக்குண்டு போன்ற ஒன்று இருப்பதாக தெஹிவளை பொலிஸ் நிலையத்திற்கு அதன் பாதுகாப்பு அதிகாரியால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி பொலிஸாரின் விசாரணையில் அது கைக்குண்டு எனத் தெரியவந்துள்ளது.

பின்னர், தெஹிவளை பொலிஸ் நிலையம் வெடிகுண்டு செயலிழப்பு பிரிவினருக்கு அறிவித்ததையடுத்து, பொலிஸ் விசேட அதிரடிப்படையின் வெடிகுண்டு செயலிழப்பு பிரிவினரால் கைக்குண்டு எடுத்துச் செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)



# வடிவேல் சுரேஷுக்கு அரச பதவி கிட்டியது

மலையகதமிழ்மக்கள்தொடர்பான விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகராக பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் நியமிக்கப்பட்டுள்ளார். நேற்று புதன்கிழமை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் இந்நியமனம் வழங்கி வைக்கப்பட்டது.

மலையகத் தமிழர்களை இலங்கைச் சமூகத்தில் முழுமையாக இணைத்துக்கொள்வது குறித்து அறிக்கையிடுவதற்கான பொறுப்பும் அவருக்கு வழங்கப்படுவதாக நியமனக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

அத்தோடு பதுளை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் பின்வரும் விடயங்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பெருந்தோட்டக் கம்பனிகளின் நலன் சார்ந்த விடயங்கள்இ மகளிர் மேம்பாடுஇ சிறுவர் பாதுகாப்புஇ தமிழ்ப் பாடசாலைகளுக்கும் பிற பாடசாலைகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் குறித்து அறிக்கையிடல் என்பன இந்த நியமனத்தின் ஊடாக வடிவேல்சுரேசுக்கான பொறுப்புகளாகக் குறிப்பிட்டுள்ளன.




